ஸ்ரீ

நல்லாதனார்

இயற்றியருளிய

திரிகடுகம்,

மகாவித்துவான்

கோ. இராஜகோபாலப்பிள்ளையவர்கள்

இயற்றிய

உரையுடன்.

இது

சென்னைப் பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்

பார்வையிடப்பட்டு,

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1914

விலை அணா 4.

ஸ்ரீ

முகவுரை.

திரிகடுகம் என்பது சங்கமருவிய தொகைநூற்கள் மூன்றனுள் ஒன்றாகிய பதினெண்கீழ்க்கணக்கிற் சேர்ந்தது. பதினெண்கீழ்க்கணக்குகள் இவையென்பதும் அவற்றின் இலக்கணமும் களவழிநாற்பதின் முகவுரையிற் கூறப்பட்டன. அதிற் காண்க. பதினெண்கீழ்க்கணக்கில் நீதியைக் கூறு நூற்கள் பதினொன்று. அவை:—

1. இனியவை நாற்பது.
2. இன்னா நாற்பது.
3. முதுமொழிக்காஞ்சி.
4. திரிகடுகம்.
5. நான்மணிக்கடிகை.
6. சிறுபஞ்ச மூலம்.
7. ஏலாதி.
8. ஆசாரக்கோவை.
9. பழமொழி.
10. நாலடியார்.
11. திருக்குறள்

என்பனவாம். அவற்றுள், இத்திரிகடுகத்தில் ஒவ்வொரு செய்யுளிலும் மும்மூன்று விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. மேற்காட்டிய நூற்களுள் நான்மணிக்கடிகையில் இதுபோலவே ஒவ்வொரு செய்யுளிலும் நந்நான்கு விஷயங்களும், சிறுபஞ்ச மூலத்தில் ஐவைந்து விஷயங்களும், ஏலாதியில் அவ்வாறு விஷயங்களுங் கூறப்பட்டிருக்கின்றன. இந்நூற்கள் தம்முள் ஒன்றினொன்று விஷயத்தால் அதிகப்பட்டிருக்கு முறையை நோக்கின் இவற்றுள் இத் திரிகடுகம் முதற்றோன்றிய நூலாயிருக்கலாம் என்று தோன்றுகின்றது. இந்நூல் தற்சிறப்புப் பாயிரச் செய்யுளோடு நூற்றொரு செய்யுட்களை யுடையது.

இந்நூலை யியற்றியவர் நல்லாதனார் என்பவர். இவர் சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவரல்ல ராயினும் இந்நூல் சங்கமருவிய நூலாயிருத்தலின் இவர் காலம், கடைச் சங்கக் காலமென்பதில் ஐயுறவின்று. கடைச்சங்கக்காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முற்பட்டதாமென்பர். இவர் தற்சிறப்புப்பாயிரத்துள் "கண்ணன் கழலிணை, நண்ணுமன முடையீர்" என்று ஆழ்வார் பணித்தருளியபடி கண்ணன் துதி கூறியிருக்கின்றனாராதலின் இவர் மதம் வைணவமென்பது நன்கு விளங்குகின்றது.

இந்நூலுக்கு இவ்வுரையை இயற்றியவர் மகாவித்துவான்-கோமளபுரம் - இராஜகோபாலப்பிள்ளையவர்கள். இவர் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகச் சிறந்த புலவராய் விளங்கியவர். இவரைப்பற்றிய ஏனைய விஷயங்களை இவரது நீதிநெறி விளக்க வுரையில் இவரைப்பற்றி எழுதப்பட்டிருக்கு முகவுரையைக் கண்டு அறிந்துகொள்ளுக.

இந்நூற்கு இவரியற்றிய இவ்வரிய வுரை இப்பொழுது கிடைத்தல் அருமையாக விருத்தலின் அச்சிடப்பட்டது.

பெரியோர்கள் எனதிச் சிறுமுயற்சியை இகழாமல் இதன்பொருட்டு என்னை ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:

☞ கா. ர. கோ.

ஸ்ரீ

திரிகடுகம்

மூலமும் உரையும்.

திரி என்னும் வரையறைப் பண்பையுணர்த்தும் பெயரோடு கடுக மென்னும் கார்ப்புச் சுவைப் பண்பையுடைய பண்பிப்பெயர் பண்புத் தொகைநிலைத்தொடராய்ப் புணர்ந்த திரிகடுகமென்னும் இத்தொடர் மொழியை வடநூலார் துவிகுசமாசபத மென்பர். திரிகடுகமாவன: சுக்குத் திப்பிலி மிளகு என்பன. இவை மூன்றும் உயிரோடு கூடிநின்ற உடலுக்கு உணவு செயல் இவற்றின் ஒவ்வாமையால் வரும் பிணிகளை யொழித்து, அவ்வுடலைப் பெற்றோன் அதனை நெடுங்காலங்கொண்டு செலுத்துமாறு நலந்தருதல்போல, இந்நூற் செய்யு ளொவ்வொன்று னும் செய்வனவுந் தவிர்வனவுமாகக் கூறப்படும் பொருள் மும்மூன் றும்உணருமாற்றலுள்ள அவ்வுயிர்க்குப் பேதைமையாலுண்டாம் துன்ப நீக்கி, இம்மை, மறுமை வீடுபேறுகளாகிய இன்பந்தருவனவாதலால், அப்பொருள்களுக்குத் திரிகடுகமென்பது உவமையாகுபெயராய், அப் பொருள்களின் பெயர் அவற்றை யுணர்த்தும் செய்யுள்களுக்குக் காரிய வாகுபெயராய், அச்செய்யுள்களின் பெயர் அச்செய்யுள்கள் பலதொக்க தொகையாகிய நூலுக்குச் சினையாகுபெயராய் நின்றது; அச்செய்யுள் களால் அமைக்கப்பட்டது நூலாதலால் கருவியாகுபெயருமாம். திரி கடுகமென்பது பொருள்களுக்கு உவமையானமை இந்நூல் முதற்செய் யுளாலு முணர்க.

தற்சிறப்புப் பாயிரம்.

கண்ணகன் ஞால மளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉ—நண்ணிய
மாயச்சகட முதைத்ததூஉ மிம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி.

(இதன் பொருள்.) கண் அகல் - இடம் விரிந்த, ஞாலம் அளந்ததும்-பூமியை அளவுசெய்ததும்; காமரு சீர்-அழகிய சிறப்பையுடைய, தண் நறு பூ-குளிர்ந்த மணமாகிய மலர்களையுடைய, குருந்தம் சாய்த்ததும் - குருந்தமரத்தைச் சாய்ந்துவிழச் செய்ததும்; நண்ணிய-(கொலை செய்ய) வந்த, மாயச்சகடம் உதைத்ததும் - வஞ்சனையாகிய வண்டியை உதைத்ததும்; இம்மூன்றும்-இம்மூன்று பொருளும், பூவைப்பூ-காயாம்பூவை ஒத்த, வண்ணன் அடி - திருமேனியை யுடையானது சீர்பாதமாம் என்றவாறு.

(விசேஷ உரை.) இந்நூலுள் ஒவ்வொரு செய்யுளும் மும்மூன்று பொருளையே கூறுகின்றமை தோன்ற, எடுத்துக்கொண்ட நூல் இனிது முடிதற்பொருட்டுக் கூறும் இக்கடவுள் வணக்கத்தினும் 'இம்மூன்றும் பூவைப்பூ வண்ணனடி' என்றும், எல்லாவுயிருந் தீண்டப் பெறுதலால் ஞாலமளந்ததை முன்னும், 'சாய்த்ததும் உதைத்ததும்' ஒவ்வோருயிர்க்கே ஆதலால் அவற்றைப் பின்னும் அவற்றுள்ளும் குருந்தந் தீங்குசெய்யக் கருதியதன் றாதலால் அதனை முன்னும், சகடந் தீங்குசெய்யக் கருதியதாதலால் இதனை அதன் பின்னும் வைத்துக் கூறினர். அளபெடைகள் மூன்றும் இன்னிசை நிறைக்க வந்தன. அளந்தது, சாய்த்தது, உதைத்தது மூன்றும் இறந்தகால வினையாலணையும் பெயர்கள். அகலென்னும் வினைத்தொகையாகிய காலங்கரந்த பெயரெச்சம் ஞாலமென்னும் பிறபெயர்கொண்டது. காமர் என்னும் உரிச்சொல் பதப்புணர்ச்சியில் உகரச்சாரியை பெற்றுக் காமருசீ ரென வந்தது. அடி என்பது சாதியொருமையாதலால் சாய்த்தது, உதைத்தது

என்பன ஒருமையாகி நின்றன. மூன்று எண்ணலளவை யாகுபெயர். மூன்றும் என்ற உம்மை முற்றுப்பொருளது. பூவைப்பூ, வெண்ணடி என்பன உறுப்புத்சற்கிழமைப் பொருளனவாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

தற்சிறப்புப்பாயிர முற்றிற்று.

நூல்.

1. அருந்ததிக் கற்பினார் தோளுந் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்—சொல்லின்
அரிலகற்றுங் கேள்வியார் நட்பும்இம் மூன்றும்
திரிகடுகம் போலு மருந்து.

(இ-ள்.) அருந்ததிக் கற்பினார்-வசிட்டமுனிவன் மனைவியினது கற்பை ஒத்த கற்பினையுடைய மனைவியரது, தோளும்-தோளைத்தழுவலும்; திருந்திய-(மனமும் செய்கையும்) கோணுதலில்லாத, தொல் குடியின் மாண்டார்-பழமையாகிய குடிப்பிறப்பில் மாட்சிமைப்பட்டவரோடு, தொடர்ச்சியும் - கூடிமருவுதலும்; சொல்லின் - (பிறர் சொல்லும்) சொற்பொருளில், அரில் அகற்றும் - (பயனின்மையாகிய) குற்றத்தை நீக்கிப் பயனைக்கொள்ளுகின்ற, கேள்வியார் நட்பும் - கேள்வியையுடையாரோடு செய்யும் நட்பும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்று செய்கையும், திரிகடுகம்போலும் மருந்து - (இல்வாழ்வானுக்குத்) திரிகடுகத்தை ஒக்கும் மருந்துகளாம், எ - று.

(வி-ரை.) சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் குணங்கள் மூன்றும் மாறிமாறி வருதல் யாவர்க்கும் உளதாதலால் உயர்ந்த பொருளை இழிந்தோரும், இழிந்த பொருளை உயர்ந்தோரும், உறுதிப் பொருளைப் பகைவரும், கெடுபொருளை நட்பினரும் சில காலங்களில் கூறுவாராதலால் 'சொல்லின்' எனப் பொதுப்படக் கூறினார். கற்பினார் தோளைத் தழுவல் முதலிய மூன்றும் தம்மைக் கொண்டவனுக்குத்

துன்ப நீக்கி இன்பந்தருதலால் அவை மருந்தெனப்பட்டன. 'சொல்' இங்குப் பொருளை உணர்த்தலால் சொல்லாகுபெயர். அருந்ததிக் கற்பினார்-பண்புத்தற்கிழமைப்பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். இவ்வாறும்வேற்றுமை வருமொழியின் முதனிலை கொண்டது. மாண்டார் - உரிச்சொலடியாகப் பிறந்த இறந்தகால வினையாலணையும் பெயர்; மாண்-பகுதி, ட்-இறந்தகால இடைநிலை, ஆர் பல்லோர் படர்க்கை விகுதி; இச்சொல் இறந்தாரென்னும் பொருள் தருவதானல் மாள்-பகுதி, பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி. அது ணகரமானது மெலித்தல் விகாரம், மற்ற இடைநிலை முதலானவை மேலதனோ டொக்கும். (க)

2. தன்குணங் குன்றாத் தகைமையுந் தாவில்சீர்
இன்குணத்தா ரேவின செய்தலும்—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவு மிம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில்.

(இ-ள்.) தன் குணம் - இயற்கையாகிய பெருங்குணம், குன்றாத் தகைமையும் - குறைதலில்லாத பெருமையும்; தா இல்-அழிதலில்லாத, சீர் இன் குணத்தார் - கீர்த்தியைத்தருகின்ற இனிமையாகிய இயற்கையையுடைய நல்லோர், ஏவின செய்தலும் - ஏவிய கருமங்களைச் செய்தலும்; நன்கு உணர்வின்-(உயிர்களுக்கு) நன்மையைத் தருவதனை அறிதலுடைய, நால் மறையாளர் வழி - அந்தணர்கள் கூறிய வழியில், செலவும் - நடத்தலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்று செயலும், மேல் முறையாளர் தொழில் - மேலாகிய ஒழுக்கத்தை யாளுதலுடையாரது தொழில்களாம், எ - று.

(வி-ரை.) 'தன்குணம்' பன்மையி னொருமை வந்த வழுவமைதியன்று; தற்புகழ்ச்சி, தற்காப்பு என்பனபோல ஒருசொல்லின் தன்மைப்பட்டு நின்று இயற்கைக் குணத்தை யுணர்த்தியது. 'குன்றாத்

தகைமை' என்பதில் குன்று என்னும் ஈறுதொகுத்தலாய் நின்ற எதிர்மறைப் பெயரெச்சம், "நின்முகங்காணு மருந்தினேன்" என்பதில் காணுமென்னும் பெயரெச்சம் காட்சியை யுணர்த்திய மருந்தென்னும் பெயரைக்கொண்டாற்போலக் குன்றுமையாகிய தொழிலையுணர்த்திய தகைமையென்னும் செயற்பெயரைக்கொண்டது. இத்தொடரைக் குன்றுமையாகிய தகைமையெனக்கொண்டு பண்புத்தொகைநிலைத்தொடர் என்பாருமுளர். தா - ஓரெழுத் தொருமொழியாகிய முதனிலைத் தொழிற்பெயர்; எழுவாயாகிக் குறிப்புத்தொழிற்பெயரின் முதனிலையாகிய இல் என்பதைக் கொண்டது. இல் சீர் - பண்புத்தொகைநிலைத் தொடர்; இதை ஈறுதொகுத்தலாய் நின்ற குறிப்புப் பெயரெச்சத் தொகாநிலைத்தொட ரென்னலாகாதோ எனின்; கருங்குதிரை, பெருந்தோளென்பனவற்றையும் அவ்வாறு என்னல்வேண்டும். என்னவே பண்புத்தொகை என்பதொன்றின்றி முடியுமாதலானும், இல்லாத என்பது ஈறுதொகுத்தலாய் வரின் இல்லா என வருமேயன்றி இல் என வாராமையானும் என்னலாகாதென்க. நான்மறை - இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வம். நான்மறையாளர் என்பதற்குப் பொருள் நான்கு வேதங்களையும் ஆளுதலுடையாரென்பது. செலவு - தொழிற்பெயர்; செல் - பகுதி, அ-சாரியை, வு தொழிற்பெயர் விகுதி. (உ)

3. கல்லார்க் கினனா யொழுகலுங் காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும்—இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு.

(இ-ள்.) கல்லார்க்கு - கற்றறியாதவருக்கு, இனன் ஆய் - உறவினனாகி, ஒழுகலும் - நடத்தலும்; காழ் கொண்ட - கற்பினுறுதியைக் கொண்ட, இல்லாளை - மனையாளை, கோலால் புடைத்தலும் - (கோபம் வந்தகாலத்தில்) கோலினால் அடித்தலும்; இல்லம் - இல்லறத்தில், சிறியாரைக்கொண்டு - சிற்றறிவுடையாரது சொல்லைக்கேட்டு, புகலும் -

(நடத்தப்) புகுதலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றுசெயலும், அறியாமைபான் - (ஒருவனுக்குப்) பேதைமையினால், வரும் கேடு - உண்டாகும் கேடுகளாம், எ-று.

(வி-ரை.) சாழ் விதை எனக்கொண்டு அதற்குக் கரு என உரைப்பினும் பொருந்தும். இல்லமென்பது தன்னில்லிலிருந்து மனையாளோடு செய்யும் அறத்துக்காதலால் இடவாகுபெயர். சிறியாரென்பது அவரது சொல்லுக்காதலால் பொருளாகுபெயர். வருமென்பது இடவழுவமைதி; [நன்னூல், பொதுவியற் சூத்திரம், ௩௦-ஆவது] "தரல்வரல் கொடை செலல் சாரும் படர்க்கை, எழுவா யிரண்டும் எஞ்சிய வேற்கும்." கேடு-காரியவாகுபெயர்; முதனிலை திரிந்த தொழிலாகுபெயருமாம். (௩)

4. பகைமுன்னர் வாழ்க்கை செயலுந் தொகைநின்ற
பெற்றத்துட் கோலின்றிச் சேறலும்—முற்றன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலு மிம்மூன்றும்
சாவ வுறுவான் றொழில்.

(இ-ள்.) பகை முன்னர் - (பொறாமையால்) பகைக்குந்துணமுடையார்முன்னே, வாழ்க்கை செயலும்-(பெருஞ்செல்வத்தோடு)வாழ்தலும்; தொகை நின்ற கூட்டமாய்நின்ற, பெற்றத்துள் - மாடுகளுக்கு நடுவில், கோல் இன்றிச் சேறலும்-கோலில்லாமல் செல்லுதலும்; தன்னைக் காய்வானை - தன்னைப்பகைக்கு மியல்புடையானை, முன் கைவாங்கி-முன்னேவிட்டுநீங்கி, கோடலும் - (பின்னே அவனை) நட்புக்கொள்ளுதலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றுசெயலும், சாவ-இறக்கும்படி, உறுவான் தொழில் - தன்பமடைவோனது தொழிலாம், எ-று.

(வி-ரை.) பகை-தொழிற்பெயர்; பகு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சியையுணர்த்தும் விகுதி, உகரக்கேடு சந்தி. தொழிலும் பண்பினுளடங்குமாதலால் இது பண்பாகுபெபர். பகைமுன்னர் - எல்லைப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்; விரிந்தால் பகையின்

முன்னரென விரியும். பகைக்கு முன்னரென நான்காவது விரிக்கினும் அதுவும் அவ்வெல்லைப்பொருளில் வந்ததேயாம். பகையினது முன்னரென ஆறுவது விரிக்கின் அவ்வாறுவது இடப்பிறிதின்கிழமைப் பொருளில் வந்ததென்க. முன்னர் பண்புப்பெயர்; முன்-பகுதி, னர் பகுதிப்பொருள்விகுதி, விகுதியீற்று னகரத்திரிபு சந்தி. பெற்றம் பசுவுக்கும் எருத்துக்கும் பொதுவாகிய சொல்லாதலால் அதற்குமாடுகளெனப் பொருள் சொல்லப்பட்டது. பெற்றமும், கோலும் குறிப்புச் சொற்களெனக்கொண்டு, பெற்றத்துட் கோலின்றிச் சேறலும் என்பதற்கு (தனக்குத்தீங்குசெய்யும்) மிருகங்களுக்கு இடையே (அவற்றை அடக்கும்) கருவியில்லாமல் செல்லுதலும் என வுரைப்பினும் பொருந்தும். சேறல் - தொழிற்பெயர்; செல் - பகுதி, தல் - புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி, பகுதி முதல்நீண்டது நீட்டல் விகாரம், லகரக்கேடும் தகரத்திரிபும் சந்தி. கோடலென்னுந் தொழிற்பெயரையும் இவ்வாறே வுறப்புப் பிரிக்க. கைவாங்கல்-ஒருசொல்லின் தன்மையது. உறுதல் துடர்தலுக்கே யுரிய வினையாதலால் உறுவானென்பதற்குத் துன்பமடைவானெனப் பொருள் சொல்லப்பட்டது. இதனை "உற்றவிடத்தில், உற்றநோய், உறுநோயுரைப்பாய், பெறுவதுமுறுவதும்" எனப்பிறருரைத்தலாலும், உறுவலெனத் துன்பத்துக்கோர் பெயர் வழங்கலாலு முணர்க. (௪)

5. வழங்காத் துறையிழிந்து நீர்ப்போக்கு மொப்ப
விழைவிலாப் பெண்டிர்தோள் சேர்வும்—உழந்து
விருந்தினனாய் வேற்றூர் புகலுமிம் மூன்றும்
அருந்துயரங் காட்டு நெறி.

(இ - ள்.) வழங்கா - (யாவரும்) இழிந்துபோகாத, துறை இழிந்து - துறையிலிறங்கி, நீர் போக்கும் - பெருநீரில்போகுதலும்; ஒப்ப - (தன்விருப்பத்தை) ஒப்பாக, விழைவு இலா - விருப்பமில்லாத, பெண்டிர் தோள் - வேசையர்களது தோள்களை, சேர்வும் - தழுவுதலும்; உழந்து - (நடையால்)வருந்தி, விருந்தினன் ஆய் - (உணவின் விருப்பத்

தால்) விருந்தினனுகி, வேறு ஊர் - அயலூரில், புகலும் - புகுதலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்று செயலும், அரு துயரம் காட்டும் நெறி - அருமையாகிய துன்பத்தைக் காட்டும் வழியாம், எ - று.

(வி-ரை.) வழங்காத்துறை என்றமையால் நீரென்பதைப் பெருநீ ரென்றும். பெருநீராவது ஆறுமுதலியன. கணவனேடொப்ப விழை யும் பெண்டிர் குலப்பெண்டிராதலால் வேசையரை 'ஒப்ப விழைவிலாப் பெண்டிர்' என்றூர். பெண்டிர் - பண்படியாதப்பிறந்த பல்லோர் படர்க் கைப்பெயர்; பெண்டு-பகுதி, இர்- பல்லோர் படர்க்கை விகுதி, உகரக் கேடு சந்தி; இதில் து பததிப்பொருள் விகுதியாகிய பண்புப்பெயர் விகுதி, தகரம் டகரமாகத் திரிந்தது. வேற்றூரென்றூராயினும் 'ஒரு மொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே'' என்பதனுல் தன் ஊரி லுள்ள வேற்றில்புகலுங்கொள்க போக்கு-தொழிற்பெயர். போ-பகுதி, க்-சந்தி, கு - புடைபெயர்ச்சிப் பொருள் விகுதி. (ரு)

6. பிறர்தன்னைப் பேணுங்கா ணுணலும் பேணூர்
திறன்வேறு கூறிற் பொறையும்—அறவினையைக்
காராண்மை போல வொழுகலு மிம்மூன்றும்
ஊராண்மை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) பிறர் - அயலவர், தன்னைப் பேணுங்கால் - தன்னை விரும்பி மேன்மைப்படுத்துமிடத்து, நாணலும் - (அதற்குத் தக்கவன் அல்லேனென்று) நாணுதலும்; பேணூர் - பகைவர், திறன் - (தன்னி டத்துள்ள நற்குணநற்செய்கையின்) வகைக்கு, வேறு - வேருகிய தீக்குணச்செயல்களை, கூறின் - (தன்மேலேற்றிச்) சொல்லுமிடத்து, பொறையும் - பொறுத்தலும்; அறவினையை - உபகாரச்செய்கையை, கார் ஆண்மைபோல - மேகம் ஆளுதல்போல, ஒழுகலும் - (கைம்மாறு வேண்டாமல் உபகாரச்செய்கையை மேற்கொண்டு) நடத்தலும்; இம் மூன்றும்-ஆகிய இம்மூன்று செயலும், ஊர் ஆண்மை என்னும்-(தன

து) ஊரிலுள்ளாரை ஆளுதலென்று சொல்லப்படும், செருக்கு - செல்வமாம், எ - று.

(வி - ரை.) ஊரை ஆளுதலாவது அயலவரும், பகைவரும் நட்பினர்போன்று தனக்கு வேண்டியவற்றைச் செய்தலும், தீங்குவாராமற் காத்தலுமுடையராகுதல். ஊரென்றது பகைவர், அயலவர், நட்பினரென்னும் தன்னிலுள்ளாரை உணர்த்தலால் இடவாகுபெயர். காராண்மை என்ற குறிப்பால் அறமென்பது அறத்தின்வகை பலவற்றுள்ளுஞ்சிறந்த உபகாரத்தை உணர்த்தியது. ஆண்மை இரண்டும் தொழிற்பெயர். இந்த மை என்னும் விகுதி புடைபெயர்ச்சிப் பொருளது; ஆள்கின்றமை, ஆண்டமை என நிகழ்காலம், இறந்தகாலங்காட்டும் இடைநிலைகளைப்பெற்று உடன்பாட்டிலும், ஆளாமை என எதிர்மறையிலும் வரும். ஆண்மை என்பதில் ஆளென்னும் பகுதி புடைபெயர்ச்சியை உணர்த்தலால் அது குறிப்புத்தொழிற்பெயரன்று. பிறர் இடைச்சொலடியாகப் பிறந்த பல்லோர் படர்க்கைப்பெயர்; பிற-பகுதி, ர்-விகுதி. இவ்வாறு சொள்ளாமல் அர் விகுதி எனக்கொண்டு பகுதியீற்று அகரங் கெட்டதாகக் கொள்ளின் கடைக்குறை விகாரம் பெற்றதெனவும், விகுதி அகரங்கெட்டதாகக் கொள்ளின் முதற்குறைவிகாரம்பெற்றதெனவுமுரைக்க. பேணுர் - பல்லோர் படர்க்கை எதிர்மறை வினையாலணையும் பெயர்; பேண் - பகுதி, ஆ - எதிர்மறைவிகுதி, அனைத்துமொரு பகுதி, ஆர்-பல்லோர் படர்க்கை விகுதி, விகுதி ஆ முதற்குறை விகாரம் பெற்று முடிந்தது. கார் என்னும் விகாரப்பட்ட பண்புப்பெயர் மேகத்துக்கானமையால் பண்பாகுபெயர். செல்வமென்னுங் காரணத்துக்காதலால் செருக்கென்பது காரியவாகுபெயர். (சு)

7 வாளைமீ னுள்ள றலைப்படலு மாளல்லான்
செல்வக் குடியுட் பிறத்தலும்—பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற வருநூலு மிம்மூன்றும்
துஞ்சுமன் கண்ட கனு.

(இ - ள்.) வாளைமீன்-வாளைமீனை, உள்ளல்-உள்ளானென்னும் பறவை, தலைப்படலும் - பொருதற்கு முயலுதலும்; ஆள் அல்லான் - ஆளுந்தன்மை யில்லாதவன், செல்வக்குடியுள்-நிறைந்தசெல்வமுடைய குடியில், பிறத்தலும் - பிறந்ததும்; பல் அவையுள் - (கற்றோர்) பலர் கூடியசபையில், அஞ்சுவான் - அஞ்சுமியல்புடையவன், கற்ற - கற்றறிந்த, அரு நூலும் அருமையாகிய நூலினுணர்ச்சியும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்று செயலும், துஞ்சு - தூங்கின, ஊமன் கண்ட கனா - ஊமனால் காணப்பட்ட கனவை ஒக்கும், எ-று.

(வி - ரை.) வாளைமீனுள்ள றலைப்படலென்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகுதலே யன்றி வாளைமீன் உள்ளலைத்தலைப்படலென எழுவாய்த் தொகாநிலைத்தொடருமாதலால் இரு பொருளால் மயங்கியதென்க. எழுவாய்த்தொடரை மயங்கியதன்றென மறுப்பாருமுளர். வாளைமீனுள்ள றலைப்படலென்பது பிறிதுமொழிதலென்னும் அணியாதலால் ஒருவன் தன்னால் முடித்தற் கருமையாகிய போரைச்செய்து வெற்றிபெற முயலுதலுமெனப் பொருள்கொள்க. தலைப்படல் ஒருசொல்லின் தன்மையது. பலர்கூடிய அவையைப் பல்லவை என்றது ஓர் குறிப்பு. நூல் - காரணவாகுபெயர். ஊமன் கண்டகனா பிறராலறியப்படாதவாறுபோல் வாளைமீனுள்ளறலைப் படல் முதலிய மூன்றும் அறியப்பட்டுப் புகழடையா என்பதாம். இம் மூன்றையும் அடியில் வரும் பாட்டில் இவற்றிற்கு எதிர்மறை முகத் தாற் கூறுவார். (எ)

8. தொல்லவையுட் டோன்றுங் குடிமையுந் தொக்கிருந்த
நல்லவையுண் மேம்பட்ட கல்வியும்—வெல்சமத்து
வேந்துவப்ப வட்டார்த்த வென்றியு மிம்மூன்றும்
தாந்தம்மைக் கூறாப் பொருள்.

(இ-ள்.) தொல் அவையுள் - பழமையை ஆராயவல்லோர் கூடிய சபையில், தோன்றும் - (மேலாக) விளங்கும், குடிமையும் - உயர்

குடிப்பிறப்பும்; தொக்கு இருந்த - கூடியிருந்த, நல் அவையுள் - நல்லோர்சபையில், மேம்பட்ட கல்வியும் - மேன்மையடைந்த கல்விப்புலமையும்; வெல் சமத்து - (பகைவரை) வெல்லவல்லோரது போரில், வேந்து உவப்ப-(தன்னையுடைய) அரசன் மகிழும்படி, அட்டு - (பகைவரைக்) கொலைசெய்து, ஆர்த்த-வீர ஒலிசெய்த, வென்றியும்-வெற்றியும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், தாம் - (அவற்றையுடையோர்) தாம், தம்மைக் கூறு-தம்மைப் புகழ்ந்து சொல்லாத, பொருள்-பொருளாம், எ - று.

(வி - ரை.) தொல்லவை, நல்லவை, வெல்சமம் இவைமூன்றும் பல்லவை என்பதுபோல்வந்த ஓர் குறிப்பு. குடிமைமுதலிய மூன்றும் பிறரால் புகழப்படுவன அன்றித் தம்மையுடையோரால் புகழப்படுவனவாயின் அவர் உலகரால் பித்தரென்றிகழப்படுவா ரென்பதாம் வேந்து-பண்பாகுபெயர். ஆர்த்த என்னுங் காரியப்பொருட்டாகிய இறந்தகாலப் பெயரெச்சம் வென்றி என்னுங் காரணப்பெயர் கொண்டது. வென்றி-தொழிற்பெயர்; வெல்-பகுதி, தி - புடைபெயர்ச்சிப் பொருள் விகுதி, பகுதியீற்று லகரமும், விகுதி முதல் தகரமும் றகரமானது சந்தி, சந்தியால் திரிந்த பகுதியீற்று றகரம் னகரமானது மெலித்தல் விகாரம். இச்சொல் மெலித்தலைப் பெறுமல் வெற்றி எனவும் வழங்கும். உவப்ப-செயவென்வாய்பாட்டு வினையெச்சம்; இது காரியப்பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்தது. உவப்ப: உவ - பகுதி, ப் - சந்தி, ப்-விரித்தல் விகாரம், அ - வினையெச்ச விகுதி. அட்டு - இறந்தகாலவினையெச்சம்; அடு-பகுதி, உ - வினையெச்சப்பொருள் விகுதி, பகுதி ஒற்றிரட்டியது விரித்தல் விகாரம், அதுவே காலம் உணர்த்தியது, பகுதியீற்றுகரக் கேடு சந்தி. (அ)

9. பெருமை யுடையா ரினத்தி னகறல்
உரிமையில் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்
விழுமிய வல்ல துணிதலிம் மூன்றும்
முழுமக்கள் காத லவை.

(இ - ள்.) பெருமை உடையார் (அறிவொழுக்கங்களில்) மிகுதியையுடையாரது, இனத்தின் - இனத்தினின்று, அகறல் - நீங்குதலும்; உரிமை இல்-உரியாதவில்லாத, பெண்டிரை - மாதர்களை, காமுற்று - விரும்பி, வாழ்தல் - (அவரோடு) வாழ்தலும்; விழுமிய அல்ல - சிறந்தவை அல்லாதவைகளை, துணிதல்-(சிறந்தவையாகத்) துணிதலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், முழுமக்கள் - மூடர், காதலவை - ஆசைசெய்பவையாம், எ-று.

(வி - ரை.) உரிமையில் பெண்டிரையெனப் பொதுப்படக் கூறியதனால் அதற்கு வேசையரையும், பிறர் மனைவியரையுமெனக் கொள்க. பெருமையுடையாரினம் ஒன்றன் கூட்டத் தற்கிழமைப்பொருளில்வந்த ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். பெருமையுடையாராகிய இனமெனப் பண்புத்தொகைநிலைத்தொடருமாம். அகறல் - தொழிற்பெயர்; அகல் - பகுதி, தல் - புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி, லகரக்கேடும் தகரத்திரிபும் சந்தி. உரிமையில் - எழுவாய்த் தொகாநிலைத்தொடர். காமுற்று: காமம் உறு என்பவற்றில் நிலைமொழியீறு கடைக்குறையாய் நின்ற காமுறு என்பது பகுதி, உ - வினையெச்சவிகுதி, பகுதி ஒற்றிரட்டல் விரித்தல் விகாரம், அதனிற் றகரக்கேடு சந்தி. விழுமிய - பண்படியாகப்பிறந்த பலவின்படர்க்கைப் பெயர்; விழுமு-பகுதி, இ-சாரியை, ய்-சந்தி, அ-பலவின்படர்க்கை விகுதி. இப்பகுதியோடு பகுதிப்பொருள்விகுதி புணரின் அம் என்பது புணரும். விழுமியவல்ல - எழுவாய்த் தொகாநிலைத்தொடர். அல்ல - பண்படியாகப் பிறந்த குறிப்புவினைப்பெயர். அறிவின்மையாகிய குறைவுள்ள மக்களை முழுமக்களென்பது மங்கலவழக்கு. காதலவை - தொழிலடியாகப் பிறந்த பலவின்படர்க்கைப்பெயர்; காதல்-பகுதி, (ஒன்றின்மேலெழும் விருப்பம், அ-சாரியை, வை-பலவின்படர்க்கை விகுதி. (கூ)

10. கணக்காயரில்லாத வூரும் பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா வவைக்களனும்—பாத்துண்ணும்

தன்மையி லாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த லில.

(இ-ள்.) கணக்காயர் - பாடம் ஓதுவிப்பாரை, இல்லாத ஊரும் - உடையதாயிராத ஊரிலிருத்தலும்; பிணக்கு - (ஒரு பொருளைப்பற்றி இருவர் மாறுபட்டபோது) அம்மாறுபாட்டை, அறுக்கும் - நீக்க வல்ல, மூத்தோரை-(கல்வியறிவுகேள்விகளில்) முதிர்ந்தவரை, இல்லா அவைக்களனும் - உடையதாயிராத சபையிலிருத்தலும்;பாத்து - (பிரம சாரி முதலானோர்க்குப்)பகுத்துக்கொடுத்து, உண்ணும்-(தானும்) உண்ணுகிற, தன்மையிலாளர் - தன்மையில்லாதவர்க்கு, அயல் இருப்பும் - அயலில் இருத்தலும்; இம்மூன்றும் - இந்தமூன்றும், நன்மை பயத்தல் இல - (ஒருவனுக்கு) நன்மையைத் தருதலில்லன ஆம், எ-று.

(வி - ரை.) கணக்காய ரென்போர் மூலபாடங் கற்பிப்போர்; "கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தால், பெற்றதாம் பேதையோர் சூத்திரம்" என்பதனாலுமுணர்க. ஊர், அவைக்கள னென்பவற்றோடும் இருப்பென்னுந் தொழிற்பெயரைக் கூட்டுக. பிணக்கு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பிரமசாரி முதலியோராவார் - பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, ஆதரவு செய்தவரால் கைவிடப்பட்டவன், தரித்திரன், ஒருவருமில்லாமல் தன்னிடம் வந்து இறந்தவன், பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார் என்னும் பதின்மர். அவைக்களன்-இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். பாத்து-இறந்தகால வினையெச்சம்; பா-பகுதி,(பகுஎன்பதன்மரூஉ), த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, உ - வினையெச்சவிகுதி. இலாளரயல் என்பதை ஐந்தாவத னெல்லைப்பொருட்டாகிய நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகக் கொள்ளலே அன்றி இலாளரது அயலென இடப்பிறிதின் கிழமைப்பொருட்டாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராக வுங்கொள்க. மூன்றும் பயத்தலை இல என இரண்டாவது விரிக்கினு மமையும். இல என்னுங் குறிப்புவினைமுற்று செயப்படுபொருள்

குன்றியும், குன்றாமலும் வரும். இல் என்னும் பண்படியாகப் பிறக்கும் மற்ற வினைவிகற்பங்களும் இவ்வாறு வருதல் காண்க. (க0)

11. விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும் வீழக்
களியாதான் காவா துரையும்—தெளியாதான்
கூரையுட் பல்காலுஞ் சேறலு மிம்மூன்றும்
ஊரெல்லா நோவ துடைத்து.

(இ - ள்.) விளியாதான் - (இனிமையாகப்) பாடாதவன், கூத்து ஆட்டு-கூத்தாட்டத்தை, காண்டலும்-செய்தலும்; வீழ-(மயக்கத்தால்) விழும்படி, களியாதான் - (மதுவுண்டு) களியாதவன், காவாது - (தன் நாவைக்) காக்கமாட்டாமல் உரையும்-(குற்றமாகியவொன்றைச்) சொல்லுதலும்; தெளியாதான்-(தன்னைத்) தேறாதவனுடைய, கூரையுள்-வீட்டில், பல்காலும் - பலமுறையும், சேறலும் - செல்லுதலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், ஊர் எல்லாம்-ஊரிலுள்ளோரெல்லாம், நோவது - துன்பப்படுங் குற்றத்தை, உடைத்து - உடையன, எ-று.

(வி - ரை.) வீழக்களித்தவன் காவாதுரைத்தல் யாவரும் நோவ தன்றாதலால் வீழக்களியாதான் காவா துரைத்தல் அவர் நோவதுடைத் தாயிற்று. விளித்தல்-ஒலித்தல்; அது இங்குப் பாடலின்மேல் நின்றது. விளியாதான், களியாதான், தெளியாதான்-எதிர்மறை வினையாலணையும் பெயர்கள். கூத்து-முதனிலையில்லாத் தொழிற்பெயர். ஆட்டு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். கூத்தாட்டு இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலைத்தொடர். காண்டல் செய்தலை யுணர்த்தியது; "கண்டவனந்தரங் காலெரிநீர்வையம்" எனவும், "முனைவன்கண்டது" எனவும் பிறர் கூறியவற்றாலுமுணர்க. காவாது எதிர்மறை வினையெச்சம்; கா - பகுதி, வ்-சந்தி, ஆ எதிர்மறை விகுதி, அனைத்து மொருபகுதி, த்-விரித்தல் விகாரம், உ-வினையெச்ச விகுதி. இது உரை என்னும் முதனிலைத் தொழிற்பெயர் கொண்டது. பல்கால் - பண்புத்தொகைநிலைத்தொடர்;

விரிந்தால் பன்மையாகிய காலென விரியும். நன்னூலார் இத்தொடரில் பல என்பதன் ஈற்றகரங் கெட்டதென்பர். பல்காலுமென்ற உம்மை முற்றும்மை. ஊர்-இடவாகுபெயர். நோவது-வினைமுதல் வினையைக் கருவியின்மேலேற்றிக் கூறிய எதிர்கால வினையாலணையும்பெயர்; நோதலுக்குக் காரணம் குற்றமாதலால் அதனைக் கருவியென்றும். மூன்றும் உடைத்தென்றது பன்மையினொருமைவந்த வழுவமைதி. (கக)

12. தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
கோளாள னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது.

(இ - ள்.) தாள் ஆளன் - முயற்சியை யாளுதலுடையான், என்பான்-என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோன், கடன்படா-கடன்படாமல், வாழ்பவன் - வாழ்தலுடையான்; வேள் ஆளன் என்பான்-உபகாரி என்று சொல்லப்படுவோன், விருந்து - (வந்த) விருந்தினர், இருக்க - (பசித்து) இருக்கையில், உண்ணாதான் - (தனித்து) உண்ணாதவன்; கோள் ஆளன் என்பான்-(ஆசிரியன் கூறிய நூற்பொருளை) அமையக் கொள்ளு மாணாக்கனென்று சொல்லப்படுவோன், மறவாதான்-(கேட்டவற்றை) மறத்தலில்லாதவன்; இம் மூவர் - ஆகிய இம்மூவரும், கேள் ஆக - (தனக்கு) நட்பினராயிருக்க, வாழ்தல் - (ஒருவன்) வாழ்வது, இனிது - (அவனுக்கு) நன்மைதருவதாம், எ-று.

(வி - ரை) தாள் - முதனிலையில்லாத் தொழிற்பெயர். வேள் (விருப்பம்) - முதனிலைத் தொழிற்பெயர்; இது விகுதிபெறின் வேட்டல், வேட்கை எனவரும். யாவருடைய விருப்பமும் உபகாரியின் மேலதாதலால் வேளாளனென்னுங் காரணப்பெயர் அவனை இங்கே உணர்த்தியது. கோள் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; அச்சொல் இங்கே பாடங் கேட்டலை யுணர்த்தியது; அதை "கொள்வோன்கோடற்

கூற்று, கோடன்மரபு" என்பவற்றாலு முணர்க. கோளாளன் கேளாக வாழ்த லொன்றும் மாணுக்கனைக் குறித்துநின்றது. விருந்து, கேள் - பண்பாகுபெயர்கள். இம்மூவரொன்பத னீற்றில் முற்றும்மை விகாரத் தால் தொக்கது. இம்மூவர்கேள் - பண்புத் தற்கிழமைப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகக் கொண்டு இம்மூவ ருடைய நட்பும், ஆக-உண்டாக, என உரைப்பினும் பொருந்தும். என் பான் - ஆண்பாற்படர்க்கை எதிர்காலச் செயப்பாட்டு வினைமுற்று; இதில் படு என்னும் செயப்பாட்டு வினைப்பொருள் விகுதியும், அது பற்றிவந்த அகரச்சாரியையும், அச்சாரியை பற்றிவந்த னகரமெய்யும் தொகுத்தலாய்நின்றன. (கஉ)

13. சீல மறிவா னிளங்கிளை சாலக்
குடியோம்பல் வல்லா னரசன்—வடுவின்றி
மாண்ட குணத்தான் றவசியென் றிம்மூவர்
யாண்டும் பெறற்கரி யார்.

(இ-ள்.) சீலம் - (தாய்தந்தையருடைய) குணத்தை, அறிவான் - அறிந்து நடப்பவன், இள கிளை - புத்திரனுவான்; குடி - தன் ஆளு கையின்கீழ் நின்றவர்களை, சால - மிகவும், ஓம்பல் வல்லான் - காத்தல் வல்லவன், அரசன் - அரசனுவான்; வடு இன்றி - (காமம் வெகுளி மயக்கமாகிய) குற்றமில்லாமல், மாண்ட-(தன் ஒழுக்கத்தில் சலியாது நிற்றலாகிய) மாட்சிமையுள்ள, குணத்தான் - குணத்தன்மையுடைய வன், தவசி - தவசி ஆவான்; என்ற - என்று சொல்லப்பட்ட, இம் மூவர் - இந்தமூவரும், யாண்டும் - எக்காலத்திலும், பெறற்கு - (தாய் தந்தையர்முதலிய அம்மூவகையாராலும்) பெறுதற்கு, அரியார்-அரிய ராவர், எ - று.

(வி-ரை.) உவமையாகுபெயராய் இனத்தை உணர்த்தும் கிளை என்னும்பெயர் இந்தச் சிறுமைப் பொருட்டாகிய இளமை என்னும்

அடையடுத்துப் புதல்வனை யுணர்த்திநின்றது. சால - உரியடியாகப் பிறந்த செயவென்வாய்பாட்டு வினையெச்சம். ஓம்பல்வல்லான் - தினை வழுவமைதி [நன்- சரு- சூ. கஅடு.] என்ற-இடைச்சொலடியாகப் பிற ந்த செயப்பாட்டு இறந்தகாலப் பெயரெச்சம்; அது ஈறுதொகுத்தலாய் நின்றது. யாண்டு இடைச்சொலடியாகப்பிறந்த பெயர்; யா(வினா) - பகுதி, ட் - சந்தி, டு-காலப்பொருண்மை விகுதி; இது சிறுபான்மை. பெரும்பான்மையும் இடப்பொருண்மை யுணர்த்தும். காலப்பொருண் மையே யுணர்த்தும் றவ் விகுதியையும், இடப்பொருண்மையே யுணர்த் தும் குவ் விகுதியையும், அகாமுதலிய சுட்டோடும், எகாமுதலிய வினா வோடும் ஏற்ற பெற்றியறிந்து புணர்த்துமுடிக்க. உம்மை - வினாப் பெயரை அடுத்துவந்தமையால் முற்றும்மை. தாய்தந்தையர் முதலிய மூவகையராவார் - தாய்தந்தையர், குடிகள், நற்சீடரென்பார். (கங)

14. இழுக்க லியல்பிற் றிளமை பழித்தவை
சொல்லுதல் வற்றாகும் பேதைமை யாண்டும்
செறுவொடு நிற்குஞ் சிறுமையிம் மூன்றும்
குறுகா ரறிவுடை யார்.

(இ-ள்.) இளமை - இளமைப்பருவமுடையான், இழுக்கல் - (நல் லொழுக்கத்தினின்று) வழுவுதல், இயல்பிற்று - இயல்பாயுள்ளான்; பேதைமை - அறிவிலான், பழித்தவை - (அறிவுடையோரால்) பழிக் கப்பட்ட சொற்களை, சொல்லுதல் வற்று ஆகும் - சொல்லுதல் வல்லவ னுவன்; சிறுமை - கீழ்மகன், யாண்டும் - காரணமில்லாதகாலத்தும், செறுவொடு - கறுவுதலுடையனாகி, நிற்கும் - நிற்பான்; (ஆதலால்) இம்மூன்றும் - இம்மூவரையும், அறிவு உடையார் - (மேல்விளைவை) அறிதலுடையார், குறுகார் - நெருங்கார், எ-று.

(வி-ரை) பழிக்கப்பட்ட சொற்களாவன: பொய், கோள், கடுஞ் சொல், பயனில்சொல் என்பன. பொருள்களின் தொழில்கள் இளமை யியல்பிற்று, பேதைமை வற்று, சிறுமை நிற்குமெனப் பண்பின்மே

வேற்றப்பட்டன. இளமை இழுக்கல் இயல்பிற்று, பேதைமை சொல்லு தல் வற்று இவ்விரண்டும் பால்வழுவமைதி. இழுக்கல் - தொழிற்பெயர்; இழுக்கு - பகுதி. இயல்பிற்று - செயப்படுபொருள் குன்றிய குறிப்பு வினைமுற்றாதலால் இழுக்கலை என இரண்டாவது விரித்தல் குற்றமாம். இயல் - பகுதி, பு - புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி; இவ்வியல்பென் பது பகுதி, இன்-சாரியை, று-ஒன்றன்படர்க்கை விகுதி; பகுதியீற்று உகரக்கேடும், றகரத்திரிபும் சந்தி. வற்று - செயப்படுபொருள் குன் றிய குறிப்புவினைமுற்று; வல் - பகுதி, று - ஒன்றன்படர்க்கை விகுதி, லகரம் றகரமானது சந்தி. செறுவொடு என்னும் மூன்றனுருபு விசேட ணப்பொருளது. சிறுமை நின்றபோது செறுவும் உடனிகழுதலால் உடனிகழ்ச்சிப்பொருள தெனினுமொக்கும். (கச)

1௫. பொய்வழங்கி வாழும் பொறியறையுங் கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதுந் தட்டையும்—ஊழினால்
ஒட்டி வினைநலம் பார்ப்பானு மிம்மூவர்
நட்கப் படாஅ தவர்.

(இ-ள்.) பொய் வழங்கி - பொய்ச்சொற்களைச் சொல்லி, வாழும்- (அதனால்) உயிர் வாழ்கின்ற, பொறியறையும் - அறிவில்லாதவனும்; கை திரிந்து - (பணியத்தக்காரைப் பணியும்) முறைமை வேறுபட்டு (இலனாகி), தாழ் இடத்தும் - (அதனால்) வறுமையடைந்த காலத்தும், நேர் கருதும் - (அவரைத் தன்னோடு) சமனாக எண்ணுகின்ற, தட்டை யும் - மூங்கிற்றடியை ஒத்தவனும்; ஊழினால் - (நட்புச்செய்யும்) முறை மையில் ஒட்டி - (ஒருவனை) நட்புக்கொண்டு, வினை - (தான் செய்யும் நட்பாகிய) தொழிலுக்கு நலம் - பயனை, பார்ப்பானும் - ஆராய்பவனும்; இம்மூவர் - (ஆகிய) இம்மூவரும், நட்கப்படாதவர் - நட்புக்கொள்ளப் படாதவர், எ - று.

(வி-ரை.) நேர்கருதுவோனைத் தட்டையென்னும் அஃறிணைப் பொருளாக உருவகப்படுத்தினமையால் திணைவிரவி மிகுதியால் அஃ

றிணை மூவரென உயர்திணைமுடிபு ஏற்றது. [நன் - சுரு - சூ - கஅசு.] மேலோரை வணங்காமையால் அவனைத் 'தட்டை' என்றார் பொறியறை-ஒருசொல்லின் தன்மையது; பொறியறு - பகுதி, ஐ-வினைமுதற் பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. தாழ்விடத்துமென்ற உம்மை இறந்தது தழீஇயதனோடு இழிவுசிறப்பில் வந்தது. இத்தொடர்மொழியில் தோன்றியவகரம் உடம்படு மெய்யல்லாத மெய். இது டு - சூ - இல் நெறியே என்றமையால் வந்தது. ஊழினுலென்பது உருபுமயக்கம். அளபெடை செய்யுளிசை நிறைக்க வந்தது. நட்கப்படாதவர் - ஈறு திரிந்த செயப்பாட்டு எதிர்மறை வினையாலணையும் பெயர்; நள்-பகுதி, கு-அ-சாரியை, ப்-சந்தி, படு-செயப்பாட்டு வினைப்பொருள் விகுதி, ளகரத்திரிபும், உகரக்கேடும் சந்தி, அனைத்துமொருபகுதி, ஆ-எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, இவையனைத்தும் ஒரு பகுதி, த் - விரித்தல் விகாரம், அ-சாரியை, வ்-சந்தி, அர்-பல்லோர்படர்க்கை விகுதி. (கடு)

16. மண்ணின்மேல் வான்புகழ் நட்டானு மாசில்சீர்ப்
பெண்ணினுட் கற்புடையாட் பெற்றானும்—உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானு மிம்மூவர்
சாவா வுடம்பெய்தி னார்.

(இ-ள்.) மண்ணின்மேல் - பூவுலகில், வான் புகழ்-(இரப்பவர்க்கு ஈந்து) வானைப்போலுயர்ந்த புகழை, நட்டானும் - நிலைபெறச்செய்தவனும்; பெண்ணினுள் - பெண்களில், மாசு இல்-குற்றமின்மையாகிய, சீர் - சிறப்பையுடைய, கற்பு உடையாள்-கற்பையுடையவளை, பெற்றானும்-பெற்றநாயகனும்; உண்ணும் நீர்-உண்ணுதற்குரிய நீரையுடைய, கூவல் - கிணற்றை, குறைவு இன்றி-குறைவில்லாமல், தொட்டானும்-தோண்டினவனும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், சாவா-இறத்தலில்லாத, உடம்பு - தேவசரீரத்தை, எய்தினர் - அடைந்தவராவர், எ-று.

(வி-ரை.) புகழ் பெரும்பாலும் ஈதல்பற்றி வருதலால் அச்சிறப்புப் பற்றி ஈவோனைப் 'புகழ்நட்டான்' என அவனை முன்னும் மற்ற இரு

வரையும் அவன் பின்னுமாகக்கூறினர். வான்புகழென்றது இலக்கணை; இது உவமைத்தொகை பெண்-சாதியொருமை. நட்டான், பெற்றான், தொட்டான் என்பன வினையாலணையும் பெயர்கள். நட்டான்: நடு-பகுதி, ஆன் - ஆண்பாற்படர்க்கை விகுதி, பகுதி ஒற்றிரட்டியது விரித்தல் விகாரம், அதுவே இறந்தகால முணர்த்தியது, உகரக்கேடு சந்தி. மற்ற இரண்டையும் இவ்வாறே முடிக்க. சாவாத என்னும் எதிர்மறைப் பெய ரெச்சம் ஈறுதொகுத்தலாகிச் சாவா என நின்றது. இச்சொல்லிலும் சா வாது என்னும் எதிர்மறை வினையெச்சத்திலும் த எழுத்துப்பேறு நித்தியமாயும், சாவான், சாவாதானென்னும் அவ்வினைப்பெயரில் விகற்பித்தும், சாவாதவனென்னும் ஈறுதிரிந்த அவ்வினையாலணையும் பெயரில் நித்தியமாயும் வரும். மண் - கருவியாகுபெயர். உடையாள் - செயப்படுபொருள் குன்றாக் குறிப்புவினைப்பெயர். உடையாட் பெற்றான் என்னுந்தொடரில் நிலைமொழி உயர்திணைப்பெயராதலால் இரண் டாம் வேற்றுமைத் தொகையில் [நன் - சு - சூ - ௯௧ இன்படி] ஈற்று ளகரம் இயல்பாகாமல்[அடு-இன்படி]இயல்பின் விகாரமாயிற்று. கூவல் குறைவின்றி என்பதில் நிலைமொழி அஃறிணைப்பெயராதலால் இரண் டாம் வேற்றுமைத்தொகையில் ஈற்றுலகரம் [எ௦-இன்படித்] திரியா மல் [அடு - இன்படி] விகாரத்தியல்பாயிற்று. (௧௬)

17. மூப்பின்க ணன்மைக் ககன்றானுங் கற்புடையாட்
பூப்பின்கட் சாராத் தலைமகனும்—வாய்ப்பகையுள்
சொல்வென்றி வேண்டு மிலிங்கியு மிம்மூவர்
கல்விப் புணைகைவிட் டார்.

(இ-ள்.) மூப்பின்கண் - மூப்பிலும், நன்மைக்கு-துறவறத்துக்கு, அகன்றானும் - (அஞ்சி) நீங்கினவனும்; கற்பு உடையாள் - கற்புடைய மனைவியை, பூப்பின்கண் - பூத்துநீராடியபின், சாரா - மருவாத, தலை மகனும் - நாயகனும்; வாய்ப்பகையுள்-(சோர்வாலுண்டாகிய) வாக்கின் வாவ நான்கனுள், சொல் வென்றி-(தான்கூறிய)சொல்லினது வெற்றி

யை, வேண்டும் - விரும்பிச் சாதிக்கின்ற, இலிங்கியும் - தவவேடத் தானும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், கல்விப்புணை - கல்வியறிவாகிய தோணியை, கைவிட்டார் - முற்றும் நீங்கினவராவர், எ - று.

(வி-ரை.) எல்லா இன்பங்களையும் உண்ணுதற் கியலாமையால் மூப்பின்கண்ணும் என்ற உம்மை இழிவுசிறப்பும்மை; அது தொகுத்தலாய் நின்றது. மூப்பென்ற குறிப்பால் நன்மை துறவறத்துக்காயிற்று. தலைமகள் பூத்தகாலத்தில் முதன் மூன்றுநாளும் ஆசுசமுடையளாதலால் அவையொழிந்த, மற்ற முதற் பன்னிரண்டுநாளும் கருக்கொள்ளுங் காலமாதலால் தலைமகன் அவளைப் பிரிதல் அறமன்றென்று அத்தலைமகனையும் மற்ற இருவரோடு உடனெண்ணினர். தலைமகன் தலைமகளை அக்காலத்துப் பிரிதல் கூடாமை "பூத்தகாலைப் புனையிழைமனைவியை நீராடியபின் ஈராறுநாளும், கருவயிற்றுறூஉங் காலமாதலின், பிரியப்பெறான் பரத்தையிற் பிரிவோன்" என்பதனாலுமுணர்க. வாக்கின்பகை நான்கு மேற்கூறிய பொய் முதலியன. இந்நான்கும் தீமையைத் தருதலால் 'பகை' என்றார். சொல்வென்றி-தொழிற்பண்புத் தற்கிழமைப்பொருட்டாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். வென்றி-மூப்புத்தொழிற்பெயர்கள்; மூ-பகுதி, ப்-சந்தி, பு-புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி. இலிங்கி என்பதில் பலபொரு ளொருசொல்லாகிய இலிங்கமென்னும் பகுதி தலைமைபற்றித் தவவேடக்குறியை உணர்த்தியது. கல்வி - காரணவாகுபெயர். (கஎ)

18 ஒருதலையான் வந்துறூஉ மூப்பும் புணர்ந்தார்க்
கிருதலையு மின்னாப் பிரிவும்—உருவினை
உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியு மிம்மூன்றும்
கள்வரி னஞ்சப் படும்.

(இ-ள்.) ஒருதலையான்-(கணவன் மனைவி என்னும் இருவருள்) ஒருவரிடத்து, வந்து உறும் - வந்துசேருகின்ற, மூப்பும் - முதுமைப் பருவமும்; புணர்ந்தார்க்கு - நட்பினருக்கு, இருதலையும்-(பிரியப்பட்ட

வரும் பிரியாதவருமாகிய) இரண்டிடத்தும், இன்னாப்பிரிவும் - துன்பத்தைத் தருகின்ற பிரிவும், உருவினை - உடம்பை, உள் - உள்ளிடத்துள்ள தசைமுதலியவற்றை, உருக்கி - கரையச்செய்து, தின்னும் - வருத்துகின்ற, பெருபிணியும் - (மருந்து முதலியவற்றால்) தீராத வியாதியும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், கள்வரின் - கள்வர்க்கு அஞ்சுவதுபோல, அஞ்சப்படும் - பயப்படப்படும், எ - று.

(வி - ரை.) பருவமுதலிய ஒத்த தலைமகனும் தலைமகளும் மணத்தல் மரபாதலால் 'ஒருதலையான்' எனப்பொதுப்படக்கூறினார். தன்னின் இளையாளை மணத்தலு மரபாகக்கொள்ளின் ஒருதலையானென்பதற்குத் தலைமகனிடத்தென உரைக்க. புணர்ந்தார்க்கென்னும் இறந்தகால வினையாலணையும் பெயர்க்குத் தலைமகன் தலைமகளென்னும் இருவருக்கெனக் கூறினும் பொருந்தும். ஒருதலையானென்றது உருபுமயக்கம். [நன் - சுரு - சூ. கஉக.] அளபெடை இன்னிசையளபெடை. இவ்வளபெடை வழூஉக்களைந்தே னென வாக்கியத்திலும் செய்யுளிலும், இசைநிறையளபெடை செய்யுளிலும் வருவனவாதலால் பதம்பிரிக்கின் அவ்வளபெடைகளை நீக்கிப் பதம்பிரிக்க. சொல்லிசையளபெடை சொல்லுக்குறுப்பாதலால் நீக்காது பிரிக்க. இன்னாப்பிரிவும் இன்னாமையைத் தருகிற பிரிவுமெனப் பொருள்கொண்டு இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகக் கொள்ளுதலேஅன்றி இன்னாமையாகியபிரிவுமெனக்கொண்டு பண்புத் தொகைநிலைத்தொடராக்கினும் பொருந்தும். உரு-பண்பாகுபெயர். உள்-இடவாகுபெயர். பெரும்பிணி என்பதில் பெருமை மருந்துண்ணல், மந்திரித்தல், மணிமுதலியன தானஞ்செய்தல் இவைகளால் தணியாமை உணர்த்தியது. கள்வர் - எதிர்கால வினையாலணையும்பெயர். இது கள்வார் என ஆர் விகுதி பெற்றும் வரும். கள் என்னும் இம்முதனிலையடியாகக் கள்ளார் என எதிர்மறை வினைமுற்றும், கள்ளாமை என எதிர்மறைத் தொழிற்பெயரும், உணவு என்பதுபோலக் களவு எனத் தொழிற்பெயரும் பிறக்கும். அஞ்சப்படும்

செய்யுமென் வாய்பாட்டுச் செயப்பாட்டு வினைமுற்றே ஆம். இது பெயரெச்சமே வினைமுற்றானது. (கஅ)

19. கொல்யானைக் கோடுங் குணமிலியு மெல்லில்
பிறன்கடை நின்றொழுகு வானும்—மறந்தெரியா
தாடும்பாம் பாட்டு மறிவிலியு மிம்மூவர்
நாடுங்காற் றூங்கு பவர்.

(இ-ள்.) கொல் யானைக்கு - கொல்லுந்தொழிற்குரியயானைக்கு, ஓடும் - (அஞ்சிப்போர்க்களத்தினின்று) ஓடுகின்ற, குணமிலியும் - வீரத்தன்மை யில்லாதவனும்; எல்லில்-பகலில், பிறன் கடை - (அயலானுடைய மனைவியை விரும்பி) அவன் வாயிலில், நின்று - (தனக்கு வாய்ப்பான சமயம்பார்த்து) நின்று, ஒழுகுவானும் - (அத்தீயொழுக்கத்தில்) நடப்பவனும்; ஆடும் பாம்பு-ஆடுந்தொழிலுள்ள பாம்பை, மறம் தெரியாது - (நன்றிசெய்தார்க்கும் தீமையைச் செய்கின்ற) கொடுமையை உணராமல், ஆட்டும் - ஆட்டுகின்ற, அறிவிலியும் - அறிவில்லானும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், நாடுங்கால் - ஆராயுமிடத்து, தூங்குபவர்-(பழிபாவமரணங்களில் நின்று) விரைதலில்லாதவர், எ-று.

(வி-ரை.) உண்டிமுதலியன கொடுத்துக்காத்த அரசனைப் போர் வராத முன்னெல்லாந் தாங்குவான்போன்று போர்வந்தபோது அஞ்சி ஓடுதலால் அவனைக் 'குணமிலி' என்றார்; குணமில் - பகுதி, இ-ஆண்பாம் படர்க்கை விகுதி, மற்ற இரண்டொருமைகளிலும் இவ்விகுதி வரும். பகலைக் கூறவே இரவைக்கூறவேண்டாதாயிற்று. எல்-பண்பாகு பெயர்; "எல்லே யிலக்கம்" எனத்தொல்காப்பியர் இடைச்சொலென்பர். பிறன்கடை நின்றொழுகுவானென்றது இடக்கரடக்கல் வழக்கு. நாடுங்கால்-முக்காலத்துக்கும் உரிய வினையெச்சமாயினும் இங்கு நிகழ்காலத்தில் வந்தது; நாடு-பகுதி, உம்-சாரியை, கால்-வினையெச்ச விகுதி,உகரக்கேடு, மகர திரிபும் சந்தி. தூங்குபவர்-ஈறு விகாரப்பட்ட எதிர்கால வினையாலணையும்பெயர். கொல் யானைக்கோடுங் குணமிலி என்பதற்

குக் கொலைசெய்வதாகிய யானைக்கு எதிரே ஓடுகின்ற குணமில்லாதவனுமென உரைப்பாரு முளர். (கக)

20. ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கொளலுங்—கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலு மிம்மூன்றும்
எல்லார்க்கு மின்னா தன.

(இ - ள்.) பிறன்கண் - தீயோனிடத்து, ஆசை - செல்வம், படுதலும் - உண்டாதலும்; பாசம் - சுற்றத்தார், பசிப்ப - உணவில்லாமல் வருந்தும்படி, மடியைக் கொளலும்-(ஒருவன் முயற்சியின்றிச்) சோம்பலைக்கொள்ளுதலும்; ஒருவன் கதித்து - ஒருவன் பெருத்துவளர்ந்தும், கல்லான் என்று-கற்றிலனென்று, எள்ளப்படுதலும் - (பிறரால்) இகழப்படுதலும்; இம்மூன்றும்-(ஆகிய) இம்மூன்றும், எல்லார்க்கும் - (அறிவுடையோர்) எல்லாருக்கும், இன்னாதன-துன்பந் தருவன ஆம், எ - று.

(வி - ரை.) நல்லோனுக்கு மறுதலைப்பட்டவனைப் 'பிறன்' என்றார். இதுபோலவே தீவினையைப் பிறவினை என்னுதலுங்காண்க. ஆசை பிறன்கட் படுதலு மென்பதற்குப் பிறனுடைய பொருளில் ஆசைப்படுதலுமென உரைத்தலுமொன்று; அவ்வாறுரைக்கின் பிறன் பொருளாகுபெயர். பிறன்-இடைச்சொலடியாகப் பிறந்த ஆண்பாற்படர்க்கைப்பெயர்; பிற-பகுதி, ன்-ஆண்பாற்படர்க்கை விகுதி, அன்-விகுதி, எனக்கொண்டுமுடிக்கும்போது பகுதி அகரங்கெட்டதாகக் கொள்ளின் கடைக்குறை விகாரமெனவும், விகுதி அகரங்கெட்டதாகக் கொள்ளின் முதற்குறை விகாரமெனவுங்கொள்க. கதித்தல்-பருத்தல். (உ0)

21 வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்

பலநாடி நல்லவை கற்றல் விம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள்.

(இ - ள்.) வருவாயுள் - வரும்பொருளில், கால் - காற்பங்குப் பொருளை, வழங்கி - (அறத்தின்பொருட்டுச்) செலவிட்டு, வாழ்தல் - (மனையாளோடுகூடி) வாழ்தலும்; செரு - போர், வாய்ப்ப - பயன்படும் படி, செய்தவை - (தாம்) செய்த வெற்றிச்செய்கைகளை, நாடா - கருதி (த் தம்மை) நன்குமதியாத, சிறப்பு உடைமை - மேன்மைக்குணத்தை உடையராதலும்; நாடி-ஆராய்ந்து, பல எய்த - பலவகைப்புலமையும் (தம்மில்) நிரம்பும்படி, நல்லவை - நல்ல நூற்பொருள்களை, கற்றல் - அறிதலும், இம்மூன்றும் - ஆகிய இவைமூன்றும், நலமாட்சி - நல்லறி வின் பெருமையையும், நல்லவர் - நல்லொழுக்கத்தையு முடையாரது, கோள் - கோட்பாடுகளாம், எ - று.

(வி - ரை.) தாமுண்ணுதற்கென இரண்டுபங்கும், இருப்புக்கென ஒருபங்கும் பகுத்துவைத்தலை ஒருவர் தாமேசெய்தல் கூடுமாகலால் அவற்றைக்கூறாது அறத்திற்கென ஒருபங்கை யீதலைமாத்திரங் கூறுவ ராயினர். வருவாய்-வரும்வழியையுடைய பொருளென்பது பொருளாத லால் வினைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. கால் - எண்ணலளவையாகுபெயர். செருவாய்ப்ப என்ற குறிப்பால் செய்தவை என்பது வெற்றிச்செய்கையின் மேலதாயிற்று. உடைமை - பண்புப்பெயரன்று, குறிப்புத்தொழிற்பெயர். கோள் - கொள்ளப்பட்ட தென்னும் பொருளில் கொள் - பகுதி, ஐ - செயப்படுபொருண்மை விகுதி, அது புணர்ந்து கெட்டமாத்திரத்தில் முதனீண்டது. இவ்வாறு கொள்ளாமல் கோளென்பதை முதனிலை திரிந்த தொழிற்பெயரெனக் கொண்டு, அது கோட்பாட்டுக்காயினதெனக் கொள்ளின் தொழிலாகு பெயருமாம். (உக)

22. பற்றென்னும் பாசத் தளையும் பலவழியும்
பற்றறு தோடு மவாத்தேரும்—தெற்றெனப்

பொய்த்துரை யென்னும் பகையிருளு மிம்மூன்றும்
வித்தற வீடும் பிறப்பு.

(இ - ள்.) பற்று என்னும் - (அகமும்புறமுமாகிய இருவகைப்) பற்றென்று சொல்லப்படும், பாசத்தளையும் - கயிற்றினாலாகிய விலங்கும்; பலவழியும் - பலபொருள்களிலும், பற்று அறாது - பிடிப்பு நீங்காமல், ஓடும் - விரைந்து செல்லுகின்ற, அவா தேரும் - ஆசையாகிய தேரும், தெற்றெனத்-தெளிவாக, (கேட்போர் உண்மையெனத்தெளிய) பொய்த்து உரையென்னும் - பொய்யை யுடையதாகிய சொல்லென்று சொல்லப்படும், பகை இருளும் - (ஞானத்துக்குப்) பகையாகிய இருளும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், வித்து அற - (தமக்குக்) காரணமாகிய அவிச்சைகெட, பிறப்பு வீடும்-பிறப்பழியும், எ-று.

(வி - ரை.) பொய்யாமை விளக்கமெனப்படுதலால் பொய்த்துரையை 'இருள்' என்றார். இச்செய்யுள் முற்றும் துறவறத்தானை நோக்கிற்று. நானென்னும் அகப்பற்றையும், எனதென்னும் புறப்பற்றையும் விட்டு, அவாவை ஒழித்து, மெய்ம்மையையுடையான் முத்தியை அடைவானென்பது கருத்து. இருள்-அறியாமை. பற்று, அவா, பொய்ம்மை இம்மூன்றுக்கும் அவிச்சை காரணமாதலால் அதனை 'வித்து' என்றார். பற்று - முதனிலைத்தொழிற்பெயர். பொய்த்து-பண்படியாகப் பிறந்த அஃறிணை ஒன்றன்படர்க்கைப் பெயர்ச்சொல் பொய்த்துரை - இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர்; இது சாதியொருமை; பொய்-பகுதி, த்-சந்தி, து-ஒன்றன்படர்க்கை விகுதி. துவ்வைப் பகுதிப்பொருள் விகுதி எனக் கொள்ளின் பொய்த்துரை பண்புத்தொகைநிலைத்தொடர். இவ்வாறு கொள்ளின் உரை பால்பகாவஃறிணைப்பெயர். மூன்றும் வித்தற என்பது [நன் - சுரு-சூ-கஅ௫- இல்] "சொற்றொறும் இற்றிசன்பெற்றி" என்பதனால் அமைந்த பால்வழுவமைதி. வீடுதல் தன்வினை; வீட்டுதல் பிறவினை. அற என்னும் வினையெச்சம் காரணப்பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்தது. (உஉ)

23. தானங் கொடுக்குந் தகைமையு மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமும்—தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தையு மிம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

(இ - ள்.) தானம் - தானத்தை, கொடுக்கும் - கொடுக்கின்ற, தகைமையும் - பெருஞ்செய்கையும்; மானத்தார் பழிக்கு நாணுதலுடையாரது, குற்றம்கடிந்த - குற்றத்தைநீக்கிய, ஒழுக்கமும் - நல்லொழுக்கமும்; தெற்றென - தெளிய (உண்மையாக), பல் பொருள் - பல விடயங்களினின்றும், நீங்கிய - ஒழிந்த, சிந்தையும்-எண்ணமும்; இம் மூன்றும்-ஆகிய இம்மூன்றும், நல்வினை - அறத்தின்பயனை, ஆர்க்கும்-(நீங்காதபடி) கட்டுகின்ற, கயிறு - கயிறாம், எ-று.

(வி - ரை.) மானத்தாரென்பதனீற்றில் தொக்கதொழிற் பண்புத் தற்கிழமைப்பொருட்டாகிய ஆறுவது ஒழுக்கமென்னுந் தொழிற் பெயர்கொண்டது; இது வினைமுதற்பொருண்மையில் வந்த காரகம். ஒழுக்கம்: ஒழு த-பகுதி, அம்-புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி, பகுதி ஒற்று இரட்டியது விரித்தல், உகரக்கேடு சந்தி; இவ் வம்விகுதி புணரும்போது உயிர்தொடர்க்குற்றுகரமே அன்றி நாட்டமென நெடிற்றொடரும், நெருக்கமென மென்றொடரும், ஒற்கமென இடைத்தொடரும், செற்றமென முற்றியலுகரமும் இரட்டலாகிய விகாரம் பெற்று வரும். வினையென்னுங் காரணப்பெயர் தன் காரியமாகிய பயன்மேல் நின்றது. (உ௩)

24. காண்டகு மென்றோட் கணிகைவா யின்சொல்லும்
தூண்டிலி னுட்பொதிந்த தேரையும்—மாண்டசீர்க்
காழ்த்த பகைவர் வணக்கமு மிம்மூன்றும்
ஆழ்ச்சிப் படுக்கு மளறு.

(இ - ள்.) காண்டகு - காணத்தகுந்த, மெல் தோள் - மென்மையாகிய தோள்களையுடைய, கணிகை - வேசியினுடைய, வாய் - வாயாற் பேசும், இன்சொல்லும் - (செவிக்கு) இனிமையாகிய சொல்லும்; தூண்டிலினுள் - தூண்டிலில், பொதிந்த - (இரும்பைத்) தோன்றாமல் மறைத்த, தேரையும் - தவளையின்தசையும்; காழ்த்த - வைரங்கொண்ட, பகைவர்-பகையையுடையாரது, மாண்ட-மாட்சிமைப்பட்ட, சீர் - சிறப்பையுடைய, வணக்கமும் - பணிவும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், ஆழ்ச்சிப்படுக்கும் - (தம்மை விரும்பினவர்க்குப் பின்னே) அடியில் சேர்க்கும், அளறு - நரகம்போலாம், எ - று.

(வி - ரை) நரகம்போலுதலாவது அழிதற்கேதுவாய துன்பந் தருதல்; அது தூண்டிலினுட் பொதிந்த தேரையுமென எண்ணினமையால் பெற்றாம். காண்தகு என்பதில் காண என்பது ஈறுதொகுத்தலாய் நின்றது; அதை முதனிலைத்தொழிற்பெயராகக்கொண்டு, காணுதல் தகுந்த என எழுவாய்த் தொகாநிலைத்தொடராக்கினும் பொருந்தும். பொருளுடையாரிடத்து கடுஞ்சொல் பயிலாமையை உணர்த்துதற்கு வாயென வேண்டாது கூறினார். தூண்டில், ஆழ்ச்சி-தொழிலாகு பெயர்கள்; தூண்டு - பகுதி, இல் புடைபெயர்ச்சிப் பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி. எழுச்சி என்னும் பொருள்தரும் எழில் என்பதிலும் அது வருதல் காண்க. அந்த இல் என்பது பகுதிப்பொருள்விகுதியாய் நெடில், குறில் எனப் பண்புப்பெயரில் வருதலுங் காண்க. (உச)

25. செருக்கினால் வாழுஞ் சிறியவனும் * வஞ்சத்தால்
பல்கின்பங் காட்டும் பரத்தையும்—நல்லவர்க்கு
வைத்த வறப்புறங் கொன்றானு மிம்மூவர்
கைத்துண்ணார் கற்றறிந் தார்.

---

* "பைத்தகன்ற - அல்குல் விலைபகரு மாய்தொடியும்" எனவும் பாடமுண்டு.

(இ - ள்.) செருக்கினால் வாழும் - (பெரியோரை மதியாமல்) இறுமாப்போடுவாழ்கின்ற, சிறியவனும் - அறிவிலானும்; வஞ்சத்தால்- வஞ்சனையினால், பல்கு-(ஆசை) பெருகுகின்ற, இன்பங்காட்டும்-இன்பத்தை (ப்பொருள் தந்தவனுக்கு)க் காட்டுகின்ற, பரத்தையும் - வேசியும்; நல்லவர்க்கு - துறவறத்தாருக்கு, வைத்த-அமைத்த, அறப்புறம்-அறச்சாலையை, கொன்றானும் - அழித்தவனும்; இம்மூவர் - ஆகிய இம்மூவருடைய, கைத்து - பொருளை, உண்ணார் - புசியார், கற்று - (அறநூலைக்) கற்று, அறிந்தார் - (அதன்பொருளை உள்ளபடி) அறிந்தவர், எ - று.

(வி-ரை.) ஆலுருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. சிறியவனென்பதில் சிறுமை அறிவின்மேல் நின்றது. பரத்தைகாட்டும் இன்பம் உண்மையன்றென்பார் 'வஞ்சத்தால்' என்றார். கொல்லுதல்-"அறிவினை நிச்ச நிரப்புக்கொன்றாங்கு" என்றாற்போல அழித்தலை யுணர்த்தியது. கைத்து-கையிலுள்ளதென்பது பொருள்; கை - பகுதி, த்-சந்தி, து - ஒன்றன்படர்க்கைப்பெயர் விகுதி. (உரு)

26. ஒல்வ தறியும் விருந்தின னு மாருயிரைக்
கொல்வ திடைநீக்கி வாழ்வானும்—வல்லிதின்
சீல மினிதுடைய வாசானு மிம்மூவர்
ஞால மெனப்படு வார்.

(இ - ள்.) ஒல்வது - (தான் சென்ற இல்வாழ்பவனால் தனக்குச்) செய்யக்கூடியதை, அறியும் - அறியவல்ல, விருந்தினனும் - அதிதியும்; ஆருயிரை - அருமையாகிய ஒருயிரை, கொல்வது - (ஒருவன்) கொல்லுந்தொழிலை, இடை நீக்கி - கொல்வோனுக்கும் கொல்லப்படுவதற்கும்) நடுவே (சென்று) விலக்கி, வாழ்வானும் - வாழ்பவனும்; வல்லிதின் - (மனத்தினது) உறுதியினால், இனிது சீலம் - (உயிர்க்கு) நன்மையைத்தருவதாகிய ஒழுக்கத்தை, உடைய ஆசானும் - உடைய

ஆசிரியனும், இம் மூவர் - ஆகிய இம்மூவரும், ஞாலம் எனப்படுவார் - உயர்ந்தோரென்று சிறப்பித்துச் சொல்லப்படுவார், எ - று.

(வி - ரை.) ஞாலமென்பது உயர்ந்தோரை யுணர்த்தும் உலகமென்பதற்குப் பரியாயநாமம். ஒல்வது - எதிர்கால வினையாலணையும் பெயர். விருந்தினன் - பண்படியாகப் பிறந்த பெயர்; விருந்து-பகுதி, (புதுமை),இன்-சாரியை, அன்-ஆண்பாற்படர்க்கை விகுதி,உகரக்கேடு சந்தி. இப்பகுதிப்பண்பு ஆகுபெயராய் விருந்தினனை உணர்த்துவதுமுண்டு. விருந்தினர் இருவகையர்: முன் அறிந்திருந்தமையால் குறித்து வருபவரும், அறிந்திராமையால் குறியாமல் வந்தவருமென. ஆருயிர் என்பதில் நிலைமொழி அருமை என்பதன் விகாரமொழி. இவ்வருமை உயிரையிழந்தால் உடல் அவ்வுயிரைப் பெறக்கூடாமையை உணர்த்தியது. கொல்வது-எதிர்காலத் தொழிற்பெயர். (உசு)

27. உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில்.

(இ-ள்.) உண்பொழுது - உண்ணுதற்குரிய காலத்தில், நீர் ஆடி - நீரில் ஸ்நானஞ்செய்து, உண்டலும்-பின் உண்ணுதலும்; என் பெறினும்- (சாட்சியாம்போது) பெரும்பயனைப் பெறுவதா யிருப்பினும். பால் பற்றி - ஒருபட்சத்தைச் சார்ந்து, சொல்லா - (பொய்ச்சாட்சி) சொல்லாமல், விடுதலும் - விடைகொடுத்தலும்; தோல் வற்றி - (உணவின்மையால்) உடல் இளைத்து, சாயினும் - அழிவதாயிருப்பினும், சான்று ஆண்மை - (பலநற்குணங்களாலும்) நிறைந்து (அவற்றை) ஆளுதல், குன்றாமை-குறையாமையும்; இம்மூன்றும் - இவை மூன்றும், தூயம்- (மெய்ம் மொழி மனங்களினால்) குற்றமின்மை உடையோம், என்பார் தொழில் - என்று கருதுவோரது தொழில்களாம், எ - று.

(வி-ரை.) மெய்க்குற்றம் - வேர்வை மாசுமுதலியன. மொழிக் குற்றம் - மேற்கூறிய பொய்ம்முதலிய நான்கு. மனக்குற்றம் - காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று. உண்பொழுதென்பதில் தூண்டு கோலென்பதுபோல இத்தொழிற்குரியதிது என்பதுபட நிற்றலால் உண்ணென்பதை வினைத்தொகைக் குறிப்பென்க. என் என்பது வினுப் பெயர்; இது பெரும்பாலும் "என்பெறினும்" "என்னோற்ருன்" என இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலையாயும், சிறுபான்மை "என் கொண்டியற்றியதெனத் தெரிகிலாத" என மூன்ருவதன் சொல்லுருபேற்றும்," என்னுக் கின்னும் பெருக்கின்றது" என நான்கனுருபேற்றும் வரும். குன்ருமை என்பதனீற்றில் எண்ணும்மையொன்று தொகுத்தலாயிற்று. சான்று - இறந்தகால வினையெச்சம் ஆண்மையென்னுந் தெரிநிலையுடன்பாட்டுத் தொழிற்பெயர் கொண்டது. மை விகுதி ஆண்மை எனக் கால இடைநிலை பெருத் தொழிற்பெயர்க்கு விகுதி யாய் வருதலே அன்றி ஆள்கின்றமை ஆண்டமை எனக் கால இடைநிலைபெற்ற உடன்பாட்டுத் தொழிற்பெயர்க்கும், ஆளாமை என எதிர்மறைத் தொழிற்பெயர்க்கும் விகுதியாய் வருமென்க. (உஎ)

28. வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானும்—கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானுமிம் மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார்.

(இ-ள்.) வெல்வது வேண்டி-சொல்வெற்றியை விரும்பி, வெகுண்டு-(உண்மைப்பொருளைக் கூறுவோரைக்) கோபித்து, உரைக்கும் - (கடுஞ்சொல்லைச்) சொல்லுகின்ற, நோன்பிலியும் - (தவமில்லானும்) தீயோனும்; இல்லது - (தன்னிடத்து) இல்லாத பொருளை, காமுற்று - விருப்பங்கொண்டு, இருப்பானும் - (அது கிடையாமையால்) வருந்தி யிருப்பவனும்; கல்வி - (கற்ருேன் எடுத்துக் கூறும்) கல்விப்பொருளில், செவி - தன் செவியினுல், குற்றம் பார்த்து - குற்றத்தை ஆராய்

ந்து, இருப்பானும் - (பயனைவிட்டு) இருப்பவனும், இம்மூவர் - ஆகிய இம்மூவரும், உமி குத்தி - உமியைக்குத்தி, கைவருந்துவார் - கை வருந்துவோரை ஒப்பர், எ - று.

(வி - ரை.) ஒப்பரென்னுஞ் சொல் எஞ்சிநின்றது. உமி குத்திக் கைவருந்துவோரை உவமித்தபடியால், வெகுண்டுரைத்தலும், காமுற்றிருத்தலும். குற்றம் பார்த்திருத்தலும் பயனில்செய்கையும் துன்பந் தருபவையும் என்பதாம். வெல்வது-எதிர்காலத்தொழிற்பெயர்; வெல்-பகுதி, வ்-எதிர்கால இடைநிலை, அ-சாரியை, து - புடைபெயர்ச்சியை யுணர்த்தும் விகுதி. இவ்விகுதி வென்றது, வெல்கின்றது என இறந்தகால நிகழ்காலத்தொழிற்பெயர்களிலும், வெல்லாதது என எதிர்மறைத் தொழிற்பெயரினும் வரும். வெகுண்டு - இறந்தகால வினையெச்சம்; வெகுள் - பகுதி, ட் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்சவிகுதி, ளகரம் டகரமானது சந்தி, அது ணகரமானது மெலித்தல் விகாரம். காமுற்று - இறந்தகால வினையெச்சம்; காமம் உறு என்பதில் நிலைமொழியீற்று அம்முக்கடைக்குறையாய்நின்ற காமுறு-பகுதி, உ-வினையெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி, பகுதி ஒற்றிரட்டியது விரித்தல்விகாரம்; அதுவே காலங்காட்டியது. கல்வி - தொழிலாகுபெயர். உமிக்குத்தி என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலாலும், நிலைமொழி அஃறிணைப்பெயராதலாலும் அதில் ககரம் விரித்தல் விகாரம். (உஅ)

29. பெண்விழைந்து பின்செலினுந் தன்செலவிற் குன்றாமை
கண்விழைந்து கையுறினுங் காதல் பொருட்கின்மை
மண்விழைந்து வாழ்நாண் மதியாமை யிம்மூன்றும்
நுண்விழைந்த நூலோர் வழக்கு.

(இ - ள்.) பெண் - மாதர்கள், விழைந்து - மோகங்கொண்டு, பின் செலினும் - தன் பின் தொடர்ந்தாலும், தன் செலவின் - தன்னடையினின்றும், குன்றாமை - தவறாமையும்; கண் விழைந்து-தன்னிடத்தை விரும்பி, கை உறினும் - தன் கையிற்சேர்ந்தாலும், பொருட்கு - அப்

பொருளின்மேல், காதல் இன்மை - ஆசையில்லாதிருத்தலும்; மண் விழைந்து - (மனைமுதலிய) நிலத்தை விரும்பி, வாழ்நாள் - (அறப் பயனை அடையாமல்) வாழ்கின்றகாலத்தை, மதியாமை - (நல்லதென) எண்ணாமையும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும் நுண் நூல்-நுட்ப மாகியபொருள்களை யுணர்த்தும் நூல்களை, விழைந்தவர் - விரும்பிக் கற்றுணர்ந்தவரது, நோக்கு - கருத்தாம், எ - று.

(வி - ரை.) மண்விழைந்து வாழ்ந்தநாளைத் தாம் பிறவாத நாளாக எண்ணுவரென்க. இம்மூவாசையும் துறவிக்குக் கூடா என்பதாம். பொருள்களினது நுண்மையை அப்பொருள்களை யுணர்த்தும் நூலின்மே லேற்றி 'நுண்ணூல்' என்றார். செய்தவேள்வியரென்பதுபோலநின்ற விழைந்தநூலவரென்பதை நூல்விழைந்தவரெனப் பின்முன்னாகநிறு த்தி, விகுதிபிரித்துக் கூட்டுக. பின்செல்லலும், கைபுரலும், நிச்சய மல்லவென அருமையைக்குறித்து நிற்கின்றமையால் உம்மைகளிரண் டும் உயர்வுசிறப்பு. பொருட்கென்னும் நான்கனுருபு ஏழாவதனிடப் பொருளில்வந்தது. பெண்-சாதியொருமை. செலவு - தொழிற்பெயர்; செல் - பகுதி, அ - சாரியை, வு - புடைபெயர்ச்சி விகுதி. (உக)

உ0. தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனு
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீக்கானும்
என்று மழுக்கா றிகந்தானு மிம்மூவர்
நின்ற புகழுடை யார்.

(இ-ள்.) தன் நச்சி-தன்னை விரும்பி, சென்றாரை-அடைந்தவரை, எள்ளா ஒருவனும்-அவமதியாத ஒருவனும்; மன்னிய செல்வத்து-மிகு ந்தசெல்வம் வந்தகாலத்தில் பொச்சாப்பு-(பழைய நட்புமுதலியவற்றை) மறத்தலை, நீத்தானும்-நீக்கினவனும்; என்றும்-பிறரிடத்துப் பகைமை யுண்டாகிய காலத்திலும், அழுக்காறு - அவரது செல்வங்கண்ட விடத்து மகிழாமையை, இகந்தானும் - (கடந்தவனும்) நீங்கினவனும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், நின்ற புகழ் உடையார் - அழியாப் புகழையுடையார். எ-று.

(வி - ரை) தன்னைவிரும்பி யடைந்தவராவார் விருந்ினரும், இரப்பவரும். விருந்தினரை அவமதியாமையாவது அவரைக் கண்ட போது முகமலர்ந்து இனியசொல்லைக்கூறி உண்பித்தல். இரப்பவரை அவமதியாமையாவது அவர் வேண்டியதொன்றை ஒளிக்காமல் ஈதல். இக்குணமுண்டாதலருமைநோக்கி உடையானை 'ஒருவன்' என்றார். மன்னிய - இடைச்சொலடியாகப்பிறந்த இறந்தகாலப்பெயரெச்சம்; மன் (மிகுதிப்பொருள்தரும் இடைச்சொல்) - பகுதி, ன் - சந்தி, இன் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி, இடைநிலை யீற்று னகரக்கெடு கடைக்குறை, ய்-சந்தி. நீத்தான்-இறந்தகாலவினையாலணையும் பெயர்; நீ-பகுதி, த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பாற் படர்க்கை விகுதி அழுக்காறு: அழுக்கு - முதனிலை திரிந்த தொழிற் பெயர், ஆறு - வழியெனப் பொருள்படும்பெயர்; அழுங்குதலையுடைய (வருந்துதலையுடைய) வழி என்பது; ஒருசொல்லின் தன்மையதாகிய இச்சொல் பொருமையை யுணர்த்திற்று. இப்பெயரடியாக அழுக்கறுத்தல் அழுக்கற்றான், அழுக்கற்று, அழுக்கற்ற, அழுக்காறாமை, அழுக்காறான், அழுக்காறாது, அழுக்காறாத என வினைவிகற்பங்கள் பிறத்தல் காண்க. (௩௦)

31. பல்லவையு ணல்லவை கற்றலும் பாத்துண்டாங்
கில்லற முட்டா தியற்றலும்—வல்லிதின்
தாளி னொருபொரு ளாக்கலு மிம்மூன்றும்
கேள்வியு ளெல்லாந் தலை.

(இ - ள்.) பல்லவையுள் - பலநூல்களிலும், நல்லவை - நல்லநூற் பொருள்களை, கற்றலும் - கற்றுணர்தலும்; பாத்து - (பிரமசாரி முதலியவர்க்குப்) பகுத்துக்கொடுத்து, உண்டு-தானுமுண்டு, ஆங்கு - அந்நிலையில், இல் அறம் - இல்லாளோடு கூடிச்செய்யும் அறமானது, முட்டாது - குறைவுபாடில்லாமல், இயற்றலும் - செய்தலும்; வல்லிதின் - ஊக்கத்தோடு, தாளின் - முயற்சியினால், ஒருபொருள் - செய்

தற்காரியசாரியத்தை, ஆக்கலும் - செய்துமுடித்தலும்; இம்மூன்றும் - இந்தமூன்றும், கேள்வியுள் எல்லாம் - கல்விகளெல்லாவற்றினும், தலை - சிறந்த கல்விகளாம், எ-று.

(வி-ரை.) கற்றலுமென்ற குறிப்பால் பண்படியாகப் பிறந்த பல வின்படர்க்கைப் பெயர்களாகிய பல்லவை, நல்லவை என்பன நூல் களின்மேல் நின்றன. பல்லவையுள் நல்லவை கற்றலு மென்பதற்கு, பல் அவையுள் - (கற்றோர்கூடிய) சபைகளிலும் சென்று, நல்லவை - நல்லபொருள்களை, கற்றலும் - கேட்டறிதலும், என உரைத்தலும் பொருந்தும். பிரமசாரிமுதலிய பதின்மரென்பதைப் பத்தாவதுசெய்யு ளுரையிற் காண்க. வல்லிது - பண்படியாகப் பிறந்தபெயர்; வன்மை: "ஈறுபோதல்" என்பதனால் பகுதிப்பொருள் விகுதியாகிய மை கெட்ட தும், லகரத்தோற்றமும் சந்தி, இ - சாரியை, து - ஒன்றன்படர்க்கை விகுதி. இச்சொல் பல இடுக்கண் வரினும் தளராது நிற்றலாகிய ஊக் கத்துக்காயிற்று. இன்-சாரியை, உருபன்று. கேள்வி-தொழிலடியாகப் பிறந்தபெயர்; கேள் - பகுதி, உடம்படு மெய்யல்லாத வகரமெய்த் தோற்றம் சந்தி, இ - செயப்படுபொருண்மை விகுதி; தொழிலாகு பெயருமாம். இவ்வாறு கொள்ளின் வி - புடைபெயர்ச்சிப் பொருள் விகுதி என்க. (௩௧)

32. நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலு நூற்கேலா
வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை—நன்மொழி
சிற்றின மல்லார்கட் சொல்லலு மிம்மூன்றும் [யைச்
கற்றறிந்தார் பூண்ட கடன்.

(இ - ள்.) நுண் மொழி - நுட்பமாகியபொருளை யுணர்த்துஞ் சொற்களை, நோக்கி - (நூல்களில்) ஆராய்ந்து, பொருள் கொளலும் - (அவற்றின்) பொருள்களை (உள்ளபடி) உணர்ந்துகொள்ளுதலும்; நூற்கு ஏலா-(அறிவுடையோரது) எண்ணத்துக்கேற்காத, வெண்மொழி

வெளிற்றுப்பொருளுள்ளமொழிகளை, வேண்டினும் - (ஒருவர் கேட்க) விரும்பினும், சொல்லாமை - சொல்லாதொழிதலும், நல் மொழியை - (உயிர்க்கு) நன்மைதரும் பொருளமைந்த சொற்களை, சிற்றினம் அல்லார்கண் - சிறிய இனத்தாரல்லாத பெரியாரிடத்து, சொல்லலும் - சொல்லுதலும்; இம்மூன்றும் - இந்தமூன்றும், கற்று அறிந்தார்-(நூல்களைக்)கற்று (அவற்றின்பொருளை) அறிந்தவர்,பூண்ட-மேற்கொண்ட, கடன் - கடனும், எ-று.

(வி-ரை.) பொருள்களினது நுண்மையையும், வெண்மையையும், நன்மையையும் ஒற்றுமைநயத்தால் அப்பொருள்களை உணர்த்தும் மொழிகளின்மே லேற்றினர். துகளென்பதன் மரூஉவாகிய தூளென்பதுபோல நூலென்பது நுகலென்பதன் மரூஉ. வெண்மை - நுட்பமின்மை. வேண்டினுமென்ற உம்மை வேண்டாமையை யுணர்த்தலால் எதிர்மறையும்மை. சொல்லாமை என்பதனீற்றில் உம்மை தொகுத்தல். சிற்றினமாவார் இருவினைப்பயனுமில்லையென்பாரும், விடரும், தூர்த்தரும், நடரும் முதலானோர். (௩௨)

33. கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலு மமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.

(இ-ள்.) கோல் - (தன்) அதிகாரத்துக்கு, அஞ்சி - பயந்து வாழும் - (கீழ்ப்படிந்து) வாழ்கின்ற, குடியும் - குடிகளும்; குடி தழீஇ - அக்குடிகளை அணைத்துக்கொண்டு, ஆலம் வீழ்போலும்-(அரசனுக்கும்) ஆலம்விழுதைப்போலத் தாங்கவல்ல, அமைச்சனும் - மந்திரியும்; வேலின்கடை - வேலினிடத்துள்ள, மணிபோல் - மணியைப்போல, திண்ணியான் - (போரில்) உறுதியையுடைய படைத்தலைவனது, காப்பும் - காவலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், படை வேந்தன் -

சேனையின் மிகுதியையுடைய அரசன், பற்று விடல்-அன்பைச்செல்ல விடும் பொருள்களாம், எ - று.

(வி ரை.) இம்மூன்றினிடத்தும் அரசன் அன்புகாட்டுவானுபின் அரசு இனிது நடக்குமென்பது. அணைத்துக்கொள்ளுதலாவது இன்சொல் சொல்லுதலும், தளர்ந்தகாலத்தில் வேண்டியவற்றைக் கொடுத்தலு முதலாயின. குடி பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால் அமைச்சனென்னும் உயர்திணை மிகுதிபற்றி இம்மூன்றுமென அஃறிணைமுடிபேற்றது. [நன்-சுரு - சூ. கஅசு.] தழீஇ - இறந்தகால வினையெச்சம்; தழு - பகுதி. இ - இறந்தகால வினையெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி, இகரம் ஈகாரமானதும், அது அளபெழுந்ததும் நீட்டல் விகாரம். இவ்வளபெடை சொல்லிசையளபெடை. ஆலம்வீழ் - சினைத்தற்கிழமைப்பொருட்டாகிய ஆறும்வேற்றுமைத் தொகை நிலைத்தொடர், நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே நின்ற அம் சாரியை தோன்றல். வீழ்-வீழ்தலுடையதென்னும் பொருளில் விழு - பகுதி, இ-வினைமுதற்பொருண்மை விகுதி புணர்ந்து கெட்டு, கெட்டமாத்திரத்தில் முதனீண்டு ஈற்றுகரங்கெட்டது. விழு என்பதன் விகார மொழியாகிய வீழென்னும் முதனிலைத்தொழிற்பெயர் விழுதுக்கானது அவ்வாகுபெயரெனினும் பொருந்தும். போல என்னும் செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சத்தகரவீறு தொகுத்தலாய் நின்று, திண்ணியானென்னும் பண்படியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயர் கொண்டது. விடல் - தொழிலாகுபெயர். (௩௩.)

34. மூன்று கடன்கழித்த பார்ப்பானு மோர்ந்து
முறைநிலை கோடா வரசும்—சிறைநின்
றலவலை யில்லாக் குடியுமிம் மூவர்
உலக மெனப்படு வார்.

(இ-ள்.) மூன்று கடன்-(தேவர் முனிவர் பிதிரர் ஆகிய) மூவருக்குஞ் செய்யும் கடன்களை, கழித்த - செய்துமுடித்த, பார்ப்பானும் - அந்

தணனும்; ஓர்ந்து-(அறநூலை) உணர்ந்து, முறை நிலை - நீதியில்நிற்றல், கோடா அரசும் - வழுவாத அரசனும்; சிறைநின்று - (அவ்வரசனது) ஆணையின் கீழ்நின்று, அலவலை - (அவனாணையைக்குறித்துக்) கவலை கொள்ளுதலை, இல்லா - உடையதாயிராத, குடியும்-குடியும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், உலகம் எனப்படுவோர் - உயர்ந்தோரென்று சொல்லப்படுவர், எ - று.

(வி-ரை.) தேவர்முதலிய மூவர்க்கும் கடன்கழித்தலாவது தேவர் கடன் வேள்வியாலும், முனிவர்கடன் வேதமோதலாலும், பிதிர்கடன் மகப்பெறுதலாலும் கழித்தல். மூன்றுகடனென்பதனீற்றில் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. கடனென்பதனீற்றுமகாரம் இருகுறிலை யடுத்ததாதலால் அதற்குக் கடனென னகரம்போலியாக வந்தது. தாங்கருதியபடி தீயவழியிற் செல்லின் தண்டித்து அடக்கி நல்வழியிற் செலுத்திச்சிறைபோலுதலால் அரசனை 'சிறை'எனப்பட்டது. அலவலை-தொழிற்பெயர்; அல-பகுதி, வ் - சந்தி, அல் - புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி, ஐ - சாரியை. இப்பகுதி புவ் விகுதியேற்று அலப்பு எனவரும். இல்லாத என்னும் குறிப்பு எதிர்மறைப் பெயரெச்சத்தின் இல்லென்னும் பண்படியாகிய குறிப்பு வினைப்பகுதி செயப்படுபொருள் குன்றியும், குன்றாதும் வரும். அரசு, குடி என்பன உயர்திணைப் பொருளாயினும் சொல்லால் அஃறிணையாதலால் பார்ப்பான் என்ற உயர்திணையாண் சிறப்புப்பற்றி, அவை மூவரென உயர்திணை முடிபேற்றது திணைவழுவமைதி. (௩௪)

35. முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானு
மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர்.

(இ - ள்.) முந்நீர் - சமுத்திரத்தினது, திரையின் - அலைபோல, எழுந்து - (தன்மனம்) எழுந்து, இயங்கா - அலைதலில்லாத, மேதையும்-

அறிவுடையவனும்; நுண் நூல் - நுட்பமாகிய சிந்தனையினாலும், பெரு கேள்வி - மிகுதியாகிய கேள்வியினாலும், நூல் கரை - நூல்களினது முடிவை, கண்டானும் - (ஐயம் திரிபு) இல்லாமல் கண்டவனும்; மைந் நீர்மை - (காமம், வெகுளி, மயக்கமாகிய) குற்றத்தன்மை, இன்றி - (தன்னிடத்து) உண்டாகாதபடி, மயல் அறுப்பான் - மனக்கலக்கத்தை ஒழித்தவனும், இம்மூவர் - ஆகிய இம்மூவரும், மெய்ந்நீர்மை - அழிவின்மையாகிய தன்மையையுடைய, மேல் - முத்தியுலகத்தில், நிற்பவர் - நிலைத்துவாழ்பவர், எ - று.

(வி-ரை.) நுதலென்பதன் மரூஉவாகிய நூலென்பது சிந்தனை மேல்நின்றது. பின்னுள்ள நூல் உவமையாகுபெயர். முந்நீர்: படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழிலைச் செய்யவல்ல நீர் எனக் கடலுக்குக் காரணக் குறியாயிற்று; ஆற்றுநீர், ஊற்றுநீர் ஆகிய மூன்று நீருஞ் சேர்ந்தாகிய ஓர் நீரெனப் பொருள்கொள்ளின் பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகை. திரை - தொழிலடியாகப் பிறந்தபெயர்; திரை-பகுதி, இ-வினைமுதற்பொருண்மை விகுதி புணர்ந்துகெட்டது. மேதை - பண்பாகுபெயர். கரை - தொழிலாகுபெயர். அறுப்பானென்பதனீற்றி லும்மை தொகுத்தல். மயல் என்பதன் முதல் அகரம் மையலென்னு மொழிமுதல் ஐகாரத்துக்குப் போலியாகவந்தது. மேல் - பண்பாகுபெயர். (௩௫)

36. ஊனுண் டுயிர்கட் கருளுடையே மென்பானும்
தானுடன்பா டின்றி வினையாக்கு மென்பானும்
காமுறு வேள்வியிற் கொல்வானு மிம்மூவர்
தாமறிவர் தாங்கண்ட வாறு.

(இ-ள்.) ஊன் - (வேறோருயிரினது) உடம்பை, உண்டு - (தன்னுடலைப் பெருக்கலுக்குத்)தின்று, உயிர்கட்கு-உயிர்களிடத்தில், அருள் உடையேம் - கருணையுடையோம், என்பானும் - என்று கருதுபவனும்; தான் உடன்பாடு - (பொருளுக்காகச் செய்யும் முயற்சியில்) தான்

உடன்படுதல், இன்றி - இல்லாமலிருந்து, வினை - முன்னைவினை யானது, ஆக்கும் - (அப்பொருளை) ஊட்டும், என்பானும் - என்று கருதியிருப்பவனும்; காமுறு - (ஒருபயனைப் பெறவேண்டிச் செய்ப) விரும்புகின்ற, வேள்வியில் - யாகத்தில், கொல்வானும் - (ஒருயிரைக்) கொலைசெய்பவனும்; இம்மூவர் - (ஆகிய) இம்மூவரும், தாம் கண்ட ஆறு - (தம்புல்லறிவால்) தாங்களறிந்தபடியே, தாம் அறிவர் - தாம் அறிந்தவராவார், எ-று.

(வி-ரை.) அறநூலின் கருத்தை அறிவுடையோர்பாற்கேட் டுண்மை யுணர்ந்திலராதலால் 'தாங்கண்டவாறு தாம் அறிவர்' என்றார். ஒருவன் தனக்குள் தானென்றைக் கருதும்போது தன்னைத் தன்மைப் பன்மையாகவைத்துக் கூறுதல் மரபாதலால் உடையேமென்பது இடவழுவமைதியும் பால்வழுவமைதியுமன்று; வழாநிலையேயாம். உடன்பாடு-ஒருசொல்லின் தன்மையதாகிய முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; முதனிலை திரியாதாயின் உடன்படு எனநிற்கும். இது உடம்பாடெனவும் வழங்கும். ஆக்குமென்ற குறிப்பால் வினை ஊழையுணர்த்தியது. ()

37. குறளையு ணட்பளவு தோன்று முறலினிய
சால்பினிற் றோன்றுங் குடிமையும்—பால்போலும்
தூய்மையுட் டோன்றும் பிரமாண மிம்மூன்றும்
வாய்மை யுடையார் வழக்கு.

(இ-ள்.) குறளையுள் - (நட்பினரிருவரைப் பிரிக்கும்படி ஒருவன் சொல்லும்) கோட்சொல்லில், நட்பு அளவு - (அக்கோளைக் கேட்டோனது) நட்பினது அளவு, தோன்றும்-(இவ்வளவினதென) விளங்கும்; உறல் இனிய - அடைதற்கு இனிமையாயுள்ள, சால்பினின்-(நற்குண நற்செய்கைகளினது) நிறைவில், குடிமை - உயர்குடிப்பிறப்பின்தன்மை, தோன்றும் - விளங்கும்; பால்போலும் - பாலை ஒக்கும், தூய்மையுள் - (மனம்) தூயனாந்தன்மையில், பிரமாணம்-(நிலையினது) அளவு,

தோன்றும் - விளங்கும்; இம்மூன்றும்-இந்தமூன்றும், வாய்மை உடையார் வழக்கு - உண்மைகூறும் பெரியோரது நெறியாம், எ-று.

(வி-ரை.) இம்மூன்றும் யாம் கூறியன அல்ல என்பார் 'வாய்மையுடையார்வழக்கு'என்றார். கோளில் நட்டளவு தோன்றுதலாவது மனம் வேறுபடுதலும் வேறுபடாமையுமாம். பாலில் பிரைமுதலிய பொருள்களுள் ஒன்றுகலக்கின் அது கெடுதல்போல மனத்தூய்மையில் காமமுதலிய குற்றமூன்றனுள் ஒன்று கலக்கினும் அத்தூய்மை கெடுமாதலால் 'பால்போலுந் தூய்மை' என்றார். மாநமென்னும் ஆரியமொழியினிடையேநின்ற நகரம் முதன்மொழியில் ரகாமிருத்தலால் ணகரமாகத் திரிந்தது. இராமாயணம், உத்தராயணம் எனவருஞ் சொற்களிலுங் காண்க. வழக்கு: வழங்கு-பகுதி, (இயங்கு) ஒருவன் இயங்குதற்கு வழியும் கருவியாமாதலால், இ கருவிப்பொருண்மை விகுதி புணர்ந்துகெட்டு, கெட்டமாத்திரத்தில் மெல்லொற்று வல்லொற்றாதலாகிய விகாரம் பெற்றுமுடிந்தது. இவ்வாறு கொள்ளாமல் முதனிலைதிரிந்த தொழிற்பெயராகக்கொண்டு தொழிலாகுபெயரெனினும் ஒக்கும். குடிமையை அடுத்த உம் சாரியை. (நஎ)

33. தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலு—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமைய மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை.

(இ - ள்.) தன்னை வியந்து-(ஒருவன்) தன்னை (த்தானே நன்கு மதித்து, தருக்கலும் - செருக்குக் கொள்ளுதலும், தாழ்வு இன்றி - தணிதலில்லாமல், கொன்னே - பயனின்றி, வெகுளி பெருக்கலும் - கோபத்தைப் பெருகச்செய்தலும், முன்னிய-முன்னுள்ள,(தான்கண்ட) பல்பொருள் - பலபொருள்களையும், வெஃகும் - வெளவக்கருதுகின்ற, சிறுமையும் - சிறுமைத்தன்மையும், இம்மூன்றும் - இந்தமூன்றும்,

செல்வம் - (அவனது) செல்வத்தை, உடைக்கும்-அழிக்கவல்ல, படை-ஆயுதங்களாம், எ-று.

(வி - ரை.) வியந்து - இறந்தகால வினையெச்சம்; விய பகுதி, த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்சப்பொருள் விகுதி, சந்தித்தகரம் நகரமானது மெலித்தல் விகாரம். கொன் - பயனின்மைப் பொருள்தருவதோ ரிடைச்சொல். இது ஐகாரச்சாரியை பெற்றுக் கொன்னை எனவும் வரும். ஏ - பிரிநிலை. வெகுளி - தொழிற்பெயர்; வெகுள்-பகுதி, இ - புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி. முன்னிய-பண்புப்பெயரடியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; முன் - பகுதி, ன் - சந்தி, இ-சாரியை, ய்-சந்தி, அ - பெயரெச்சவிகுதி. சொல்லியல்புணரார் இதை இடைச்சொலடியாகப் பிறந்ததென்பர். படை-தொழிலடியாகப்பிறந்தபெயர்; படு - பகுதி (அழி), இ - கருவிப்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. தன்னை வியந்து தருக்கலால் அடக்கமின்மையும், வெகுளி பெருக்கலால் துணையாயினோர் பிரிவும், பல்பொருள் வெஃகுஞ் சிறுமையால் குற்றமும் விளைந்து செல்வத்தை யழித்தலால் அம்மூன்றனையும் படையென உருவகப்படுத்தினர். (௩அ)

39. புலைமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டிர்த் தோய்தல்
கலமயக்கங் கள்ளுண்டு வாழ்தல்—சொலைமுனிந்து
பொய்ம்மயக்கஞ் சூதின்கட் டங்கலிம் மூன்றும்
நன்மையி லாளர் தொழில்.

(இ - ள்.) புலை மயக்கம் - இழிதன்மையோடு கலத்தலாவது, பொருள் பெண்டிர் - (கொடுப்பவரை விரும்பாமல்) பொருளையே விரும்புகின்ற வேசியரை, வேண்டித் தோய்தல் - விரும்பித் தீண்டுதலாம்; கலம் மயக்கம்-எச்சிற் பாத்திரத்தோடு கலத்தலாவது, கள் உண்டு வாழ்தல் - கள்ளையுண்டு கெடுதலாம்; சொல்லை முனிந்து - உண்மைச் சொல்லை வெறுத்து, பொய்ம்மயக்கம் - பொய்யோடு கலத்தலாவது, சூதின்கண் தங்கல் - சூதாட்டத்தில் இருத்தலாம்; இம்மூன்றும் - இம்

முத்தொழிலும், நன்மை - நல்லொழுக்கத்தினது, இல் ஆளர் - இன்மையை யாளுதலுடையாரது, தொழில் - தொழில்களாம், எ-று.

(வி-ரை.) புலை-பண்புப்பெயர்; புல்-பகுதி, ஐ - பகுதிப்பொருள் விகுதி. புலைமயக்கம்: புலையொடு மயக்கம், புலையைமயங்குமயக்கம், புலையினது மயக்கம் என மூன்று பொருளால் மயங்கும். கலமயக்கம், பொய்ம்மயக்கம் என்பவற்றையும் இவ்வாறுரைக்க. பொருட்பெண்டிர்: பொருளைவிரும்பும் பெண்டிர், பொருளுக்கு முயங்கும் பெண்டிர், பொருளால் முயங்கும்பெண்டிர் என இதுவும் மூன்றுபொருளால் மயங்கும். கள்ளுண்டென்ற குறிப்பால் வாழ்தல் கெடுதலை யுணர்த்திற்று. பெண்டிர்த்தோய்தல் என்பதில் நிலைமொழி உயர்திணைப் பெயராதலாலும், இப்புணர்ச்சி இரண்டாம்வேற்றுமைத் தொகையாதலாலும், [நன்-சுரு-ரு. ங்க-இன்படி] இயல்பாகாது, அ௵ - இன்படி இயல்பில் விகாரமாயிற்று. சொல்லை என்பது தொடைநோக்கி லகரந்தொகுத்தலாய்ச் சொலை என நின்றது. இது பின்னே பொய்யென்றமையால் மெய்ம்மைக்காயிற்று. சூது தன்னாலாடும் ஆட்டத்தை உணர்த்தலால் கருவியாகுபெயர். நன்மையில்லாளரென்னும் பன்மொழித்தொடரில் முன்தொடரை நன்மையினது இன்மை என ஆறும்வேற்றுமைத்தொகை எனவும், பின்தொடரை இன்மையை ஆளர் என இரண்டாம் வேற்றுமைத்தொகை எனவுங்கொள்க. (௩௯)

40. வெகுளி நுணுக்கும் விறலு மகளிர்கட்
கொத்த வொழுக்க முடைமையும்—பாத்துண் ணும்
நல்லறி வாண்மை தலைப்படலு மிம்மூன்றும்
தொல்லறி வாளர் தொழில்.

(இ - ள்.) வெகுளி - (தம்மிடத்தெழுந்த) கோபத்தை, நுணுக்கும் - சுருங்கச்செய்யும், விறலும் - ஆற்றலும்; மகளிர்கட்கு-மனைவியர்க்கு, ஒத்த - இசைந்த, ஒழுக்கம் - நடையை, உடைமையும்-உடையராயிருத்தலும்; பாத்து உண்ணும் - (பிரமசாரிமுதலியவர்க்குப்) பகுத்து

(த்தாமும்) உண்ணுதற்குக் காரணமாகிய, நல் அறிவு ஆண்மை - நல்லறிவை ஆளுந்தன்மையில், தலைப்படலும் - முதன்மையாதலும்; இம் மூன்றும் - ஆகிய இம்மூன்றும், தொல் அறிவு ஆளர் - பழமையாகிய நூலறிவையாளுதலுடையாரது, தொழில் - தொழில்களாம், எ-று.

(வி-ரை.) நுணுக்கும் - காரியப்பொருட்டாகிய பிறவினைப்பெயரெச்சம்; நுணுக்கு பகுதி, உம் - பெயரெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி, நுணுத என்னுந் தன்வினைப் பகுதி நுணுக்கென விகாரப்பட்டுப் பிறவினையானது. தன்வினைப் பகுதி, நுண் என்னும் பண்புப் பகுதியோடு வினைப்பொருண்மைக் குவ் விகுதி புணர்ந்து நின்றது. விறல்-தொழிற்பெயர்; விற-பகுதி, அல் - புடைபெயர்ச்சிப் பொருள் விகுதி, பகுதியீற்று அகரங்கெட்டதெனின் கடைக்குறை விகாரமெனவும், விகுதிமுதல் அகரங் கெட்டதெனின் முதற்குறைபெனவுங் கொள்க. (இப்பகுதி) புவ் விகுதிபெற்று விறப்பு எனவும் வரும். உடைமை: பண்புப்பெயரன்று, குறிப்புத் தொழிற்பெயர். மகளிர்களுக்கு ஒத்த ஒழுக்கம் உடையராதலாவது பஞ்சணையில் இனியராயிருத்தலே அன்றி இல்லறம்பூண்ட தமக்கிணங்கும்படி உறுதிமொழிகளை மெல்லமெல்லக் கூறி வசப்படுத்தல். (௪0)

41. அலந்தார்க்கொன் றீந்த புகழுந் துளங்கினும்
தன்குடிமை குன்றாத் தகைமையும்—அன்போடி
நாணாளு நட்டார்ப் பெருக்கலு மிம்மூன்றும்
கேள்வியு ளெல்லாந் தலை.

(இ - ள்.) அலந்தார்க்கு - (வறுமையால்) மெலிந்தவர்களுக்கு, ஒன்று ஈந்த புகழும் - (அவர் விரும்பியதாகிய) ஒருபொருளை ஈந்ததனாலுண்டாகிய புகழும்; துளங்கினும் - (வறுமை முதலியவற்றால்) தளர்ந்தவிடத்தும், தன் குடிமை-தன் குடிப்பிறப்பினுயர்வு; குன்றா-குறைதலில்லாத, தகைமையும் - பெருமையாகிய ஒழுக்கமும்; நாள்நாளும் -

ஒருநாளுக்கு ஒருநாள், அன்புஒடி-அன்பு மிகாநின்று, நட்டார் பெருக்கலும்-நட்புச்செய்தவரை (த்தன்னோடொக்கப்) பெருகச்செய்தலும், இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், கேள்வியுள் எல்லாம் - கேட்கப்படும் அறங்களெல்லாவற்றிலும், தலை - சிறந்தனவாம், எ - று.

(வி - ரை) அலந்தாரென்னும் இறந்தகால வினையாலணையும் பெயரில் பகுதி அல. ஒன்று-எண்ணலளவை யாகுபெயர். ஈந்த - காரணப்பொருட்டாக வந்த இறந்தகாலப் பெயரெச்சம். துளங்குதல் - குடிமை குன்றக் கூடியதாதலால் துளங்கினுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. குன்றாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் ஈறுதொகுத்தலாய்க் குன்றா என நின்றது. குன்றாமையே தகைமையெனக் கொள்ளின் பண்புத்தொகையென்க. நாள்நாள் - அடுக்குத் தொகாநிலைத்தொடர் அன்று, எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர். உம்மைச்சாரியை பெரும்பாலும் ஏழாம்வேற்றுமைப் பொருட் புணர்ச்சியில் வருவது. பன்மைப்பொருட்டாகிய அடுக்குத்தொடராகக் கொள்ளின் பலநாளும் எனப் பொருள் கூறுக. ஒடி என்னுஞ் சினைவினை நட்டாரென்னும் முதல்வினைப்பெயர் கொண்டது. அது ஓடாநின்றென்னும் நிகழ்காலவினையெச்சம் திரிந்துநின்றது. கேள்வி - தொழிலடியாகப்பிறந்த பெயர்; கேள்-பகுதி, வ்-உடம்படு மெய்யல்லாத மெய், இ - செயப்படுபொருண்மை விகுதி, கேட்டலாலுண்டாகிய அறிவு எனின் காரணவாகுபெயர், அன்றித் தொழிலாகுபெயருமாம். ()

42. கழகத்தால் வந்த பொருள்கா முறுமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல்—ஒழுகல்
உழவின்கட் காமுற்று வாழ்தலிம் மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு.

(இ - ள்.) கழகத்தால் வந்த - சூதாட்டத்தால் கிடைத்த, பொருள் காமுறுமை - பொருளை விரும்பாமையும்; பழகினும் - (பலநாள்) பழகினவராயினும், பார்ப்பாரை - பார்ப்பாருக்கு, தீப்போல்-தீக்கு அஞ்சி

நடப்பதுபோல, ஒழுகல் - அஞ்சி நடத்தலும்; உழவின்கண் - உழுது பயிர்செய்தலில், காமுற்று - விருப்பம் வைத்து, வாழ்தல் - உயிர்வாழ்த லும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், வேளாண் குடிக்கு - வே ளாண்மையாகிய குடியிற் பிறந்தோர்க்கு, அழகு என்ப - அழகென்று (அறிவுடையோர்) கூறுவர், எ-று.

(வி-ரை.) காமுறுமை ஒழுகல் வாழ்தல் என்பது பெயர்ச்செவ் வெண்ணாதலால் மூன்றென்னுந் தொகையோடு ஈற்றில் முற்றும்மை பெற்றது. செவ்வெண்ணினிலக்கண முணராதார்எண்ணும்மை விகாரத் தால் தொக்கன என்பர். வந்த-இடவழுவமைதி; பழகினுமென்ற உம் மை உயர்வுசிறப்பு உழவு-தொழிற்பெயர்; உழு-பகுதி, அ-சாரியை, வு- புடைபெயர்ச்சிப் பொருள் விகுதி. குடி - பண்பாகுபெயர். கழகம் - இடவாகுபெயர். பார்ப்பாரை - உருபுமயக்கம். பார்ப்பார்க்குத் தீப்போ லொழுகலாவது தீக்காய்வார் மிக அகலாமலும் மிகக்குறுகாமலும் ஒத்த விடத்து இருப்பதுபோல அவ்வந்தணரிடத்தும் அவ்வாறுநின்றுநடத்த லாம். (சஉ)

43. வாயி னடங்குத றுப்புரவா மாசற்ற
செய்கை யடங்குத றிப்பியமாம்—பொய்யின்றி
நெஞ்ச மடங்குதல் வீடாகு மிம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள்.

(இ-ள்.) வாயின் - வாக்கு, அடங்குதல் - (தீயநெறியில் செல் லாமல்) அடங்குதலால், துப்புரவு ஆம் - (இம்மையில்) அநுபவிக்கப் படும் செல்வமுளதாகும்; செய்கை-(உடலின்) செய்கை, அடங்குதல்- அடங்குதலால், மாசு அற்ற - குற்றமற்ற, திப்பியம் ஆம் - (மறுமை யில்) தெய்வப்பிறப்புளதாகும்; பொய் இன்றி - உண்மையாக, நெஞ் சம் - மனம், அடங்குதல் - அடங்குதலால், வீடு ஆகும் - முத்தியுளதா கும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றடக்கமும், வஞ்சத்தின்-பொய்யி னின்றும், தீர்ந்த - நீங்கிய, பொருள்-பொருள்களாம், எ-று.

லகர தகரங்கள் றகரமானது சந்தி, பகுதிபீற்றுச் சந்தி றகரம் னகரமானது மெலித்தல் விகாரம். எற்றூர்-இறந்தகால வினையாலணையும்பெயர்; எல்-பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, ஆர்-பல்லோர் படர்க்கை விகுதி, லகரம் றகரமானது சந்தி; இது மெலித்தல் விகாரம் பெற்று என்றூரெனவும் வழங்கும். இயைவ - பலவின் படர்க்கை எதிர்கால வினையாலணையும்பெயர்; யகரத்துக்குச் சகரம் போலியாய் இசைவ எனவும் வழங்கும். வரவு - தொழிற்பெயர்; வா - பகுதி, ரு-விரித்தல் விகாரம், அ-சாரியை, வு-புடைபெயர்ச்சிப் பொருள் விகுதி, பகுதி ஆ அவ்வானது குறுக்கல், உகரக்கேடு சந்தி. வர வுண்மை - பண்புத் தற்கிழமைப் பொருட்டாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். கூற்றம் சொல்லால் அஃறிணை, பொருளால் உயர்திணை. (சரு)

46. காறாய்மை யில்லாக் கலிமாவுங் காழ்கடிந்து
மேறாய்மை யில்லாத வெல்களிறும்—சீறிக்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளியிம் மூன்றும்
குறுகா ரறிவுடை யார்.

(இ-ள்.) கால்-ஐவகை நடையும், தூய்மை-தூயது ஆகும் தன்மை (குற்றமின்மை), இல்லா - இல்லாத, கலினமாவும் - குதிரையும்; காழ்-கட்டுத்தறியை, கடிந்து - முறித்து, மேல் தூய்மை - (வீரனிருப்பதற்கேற்ற) மேலிடந் தூயதாந்தன்மை, இல்லாத - உடையதாயிராத, வெல் களிறும் - (போரை) வெல்லுதற்குரிய யானையும்; கறுவி - (மாணாக்கன்மேல்) வைரமடைந்து, சீறி-சீற்றங்கொண்டு, வெகுண்டு உரைப்பான்-கோபித்து(ப்பாடம்) சொல்லுவோனுடைய, பள்ளி-கல்வி பயிலிடமும்; இம்மூன்றும் - ஆகிய இம் மூன்றையும், அறிவு உடையார் - (அவற்றின் பயனின்மையை) உணர்தலுடையார், குறுகார் - சேரார், எ-று.

(வி-ரை.) பள்ளி என்பதனீற்றில் உம்மைவிகாரத்தால் தொக்கது. பள்ளியை அறிவுடையார் குறுகாமையாவது அப்பள்ளியில் தஞ்

சிறுவரைக் கல்வி பயிலவிடாமை. ஐவகை நடையாவன - மெல்லென நடக்கும் நடையாகிய தௌரிதகம், விரைந்து நடக்கும் நடையாகிய ஆக்கிரந்திதம், இருகாற்றூக்கி ஆடிவரு நடையாகிய வல்கிதம், சுற்றி யோடலாகிய இரேசிதம், முழுவோட்டமாகிய புலிதம் என்பன. எண்ணலளவை யாகுபெயராகிய காலென்பது முதலாகுபெயராய் நடையை யுணர்த்தியது. மேல் - பண்பாகுபெயர். தூய்மை இரண்டும் குறிப்புத் தொழிற்பெயர். காறூய்மை மேறூய்மை இரண்டும் எழுவாய்த் தொகாநிலைத்தொடர்கள்; ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத் தொடராயின் காற்றூய்மை, மேற்றூய்மை எனவரும். கலினமா என்பது கலிமா எனத் தொகுத்தல் பெற்றது. கலினம்-கடிவாளம். கலிமா என்பதற்குக் கனைக்கின்றமா என உரைப்பினும் பொருந்தும். சீற்றம் - சிறிதுபொழுது நிகழுங்கோபம். (சுசு)

47. சில்சொற் பெருந்தோண் மகளிரும் பல்வகையும்
தாளினாற் றந்த விழுநிதியு நாடோறும்
நாத்தளிர்ப்ப வாக்கிய வுண்டியு மிம்மூன்றும்
காப்பிகழ லாகாப் பொருள்.

(இ-ள்.) சில் சொல் - மழலைச்சொல்லையும், பெரு தோள் - பெருமையாகிய தோள்களையுமுடைய, மகளிரும் - அழகிய மங்கையரும்; பல்வகையும் - பலவகைகளிலும், தாளினால் - (செய்த) முயற்சியால், தந்த - தேடிய, விழுநிதியும் - சிறப்பாகிய பொருளும்; நாள்தோறும் - (பின் நினைக்கும்) நாள்களிலெல்லாம், நாத்தளிர்ப்ப - நாநீரரும்பும்படி, ஆக்கிய - சமைத்த, உண்டியும் - உணவும்; இம்மூன்றும் - ஆகிய இம் மூன்றுபொருளும், காப்பு - காத்தலை, இகழல் ஆகா - அவமதித்தலில்லாத, பொருள் - பொருள்களாம், எ-று.

(வி-ரை.) மகளிர் என்னும் உயர்திணை மிகுதிபற்றி மூன்றுமென அஃறிணை முடிபேற்றது சிறுசொல்லென்பதைச் சில்சொல்

என்கிறது வழக்கு. சிறுமை நிரம்பாமையை யுணர்த்தியது. அந்த - இடவழுவமை. விழுநிதி - பண்புத்தொகைநிலைத்தொடர்; விரிந்தால் விழுப்பமாகிய நிதி எனவிரியும். விழுமமாகிய நிதியென்னலாகாதோ எனின் விழுமு நிதியென்றிருக்கின் என்னலாம். தோறு - ஏழாம் வேற்றுமை யிடப்பொருண்மையையும், பன்மையையும் உணர்த்தும் இடைச்சொல். உம்மை முற்றும்மை. உண்டி - தொழிலடியாகப் பிறந்தபெயர்; உண் - பகுதி, த் - விரித்தல் விகாரம், இ - செயப்படு பொருண்மை விகுதி, தகரம் டகரமானது சந்தி. (சஎ)

48. வைததனை யின்சொல்லாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

(இ - ள்.) வைததனை - (ஒருவனால்) வையப்பட்ட நிந்தைமொழியை, இன் சொல் ஆ-இனிமையாகிய சொல்லைக் கொள்ளுதல்போல, கொள்வானும் - கொள்ளுகின்றவனும்; கூழை - (கிடைத்த) கூழை, நெய் பெய்த - நெய்யை நிரம்பவார்த்த, சோறு என்று - சோறு இது ஆமென்று, மதிப்பானும் - நன்குமதித்து உண்பானும்; கைப்பதனை - கைக்கின்ற பொருளை, கட்டி என்று - வெல்லம் இதுவாமென்று, ஊறிய - (தன்வாயில்) ஊறும்படி, உண்பானும் - உண்கின்றவனும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், மெய்ப்பொருள் - மெய்ம்மையாகிய பரம்பொருளை, கண்டு வாழ்வார் - உணர்ந்து வாழ்பவர், எ-று.

(வி-ரை.) வைதது - ஒன்றன்படர்க்கை இறந்தகாலச் செயப்பாட்டு வினையாலணையும் பெயர்; வை-பகுதி, ய் - சந்தி, அ-சாரியை, ப்- சந்தி, படு - செயப்பாட்டு வினைப்பொருள் விகுதி, அனைத்து மொரு பகுதி, இப்பகுதி ஒற்றிரட்டியது விரித்தல்விகாரம், அதுவே காலங் காட்டியது, அ-சாரியை, து-ஒன்றன்படர்க்கை விகுதி, இது படு விகுதி

யும், அதுபற்றிவந்த சாரியை சந்திகளும் தொகுத்தலாய் நின்றது. ஆக என்பதில் விகுதி அகரமும் குச்சாரியையும் தொகுத்தல். ஊறிய-செய்பிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம். ஊறு-பகுதி, இய- விகுதி, உகரக்கேடு சந்தி. கைப்பது - வினையாலணையும் பெயர். கட்டி - தொழிலடியாகப் பிறந்தபெயர்; கட்டு - பகுதி, இ-வினைமுதற் பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி; பொருள் கருப்பஞ்சாறு காய்ச்சப்படுவதனால் இறுகியதென்பது. (சஅ)

49. ஏவாது மாற்று மிளங்கிளையுங் காவாது
வைதெள்ளிச் சொல்லுந் தலைமகனும்—பொய்தெள்ளி
அம்மனை தேய்க்கு மனையாளு மிம்மூவர்
இம்மைக் குறுதியில் லார்.

(இ-ள்.) ஏவு - (தாய்தந்தையரால்) ஏவிய, ஆதும் - எதையும், (எவ்வளவு சிறிய காரியத்தையும்) மாற்றும் - (தன்னால் ஆகாதென) மறுக்கின்ற, இளங்கிளையும் - புத்திரனும்; காவாது - (மனைவியைப்) பாதுகாத்த லில்லாமல், எள்ளி - அவமதித்து, வைது சொல்லும் - வசைசொல்லுகின்ற (நிந்தித்துப் பேசுகின்ற), தலைமகனும் - கணவனும்; பொய் - பொய்ம்மொழியை, தெள்ளி - ஆராய்ந்து சொல்லி, அம்மனை - தான் வாழ்கின்ற வீட்டின் செல்வத்தை, தேய்க்கும் - (பயனின்றி) அழிக்கின்ற, மனையாளும் - இல்லாளும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், இம்மைக்கு-இப்பிறப்பிற்கு, உறுதி இல்லார்-(தாய் தந்தையர் முதலியவர்க்குத்) துணையாதலிலர், எ-று.

(வி - ரை.) ஆது யாதென்பதன்மரூஉ "ஆதுமில்காலத்தெந்தை யச்சுதனமலனையே" என்னும் பெரியார்செய்யுளாலு முணர்க. உம்மை இழிவுசிறப்போடு முற்றுப்பொருள்பட நின்றது. அகரச்சுட்டு உரிமையை உணர்த்தியது. மனை - தன்னிலுள்ள செல்வத்தை உணர்த்தலால் இடவாகுபெயர். தேய்க்கும்-பிறவினைப்பெயரெச்சம்; இதன்பகுதி தன்

வினைக்கும் பிறவினைக்கும் பொது. நன்வினையில் தேயுமென வரும். பிறவினையில் குச்சாரியை பெறும். ஏவாதுமாற்றும் என்பதை ஏவாதும் ஆற்றுமெனப் பதம்பிரித்து, ஏவாத காரியத்தையும் செய்கின்ற எனப் பொருளுரைத்து, உம்மையை இறந்ததழீஇய எச்ச உம்மையாகக் கொண்டு, அவ்வெச்சவும்மையாற் போந்தபொருள் ஏவியதைச்செய்யாமையேயன்றி எனக் கொளலுமாம். வைது-தொழிற்பெயர். (சகூ)

50. கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள்.

(இ-ள்.) கொள் பொருள்-(தான்) கொள்ளுதற்குரிய பொருளை, வெஃகி - அடையக்கருதி, குடி - (அதனைக் கட்ட வலியில்லாத) குடிகளை, அலைக்கும்-வருத்துகின்ற, வேந்தனும்-அரசனும்; உள் பொருள் சொல்லா - (சாட்சியாகும்போது) உண்மைக் காரியத்தைச் சொல்லாமல் சலம் மொழி பொய்க்காரியத்தைச்சொல்லுகின்ற, மாந்தரும்-மனிதரும்; இல் இருந்து - (ஒருவனுக்கு மனையாளாய்) வீட்டிலிருந்து, எல்லை - (அவனது சொல் வீடு என்னும் இரண்டினது) எல்லையை, கடப்பாளும் - கடந்து நடப்பவளும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், வல்லே-விரைந்து, மழை அருக்கும்-மழையைக் குறைக்கின்ற, கோள்-கிரகங்களாவர், எ-று.

(வி - ரை.) இம்மூவருமுள்ள நாட்டில் மழைபெய்யாதென்பது. இரண்டாம் அடிப்பொருளைப் போதகாசிரியர் மேலேற்றிக் கூறினும் அமையும். உள்பொருள் - பண்புத்தொகை நிலைத்தொடர், விரிந்தால் உண்மையாகிய பொருளென விரியும். சொல்லாமலென்னும் எதிர்மறைவினையெச்சம் ஈறுதொகுத்தலாய்ச் சொல்லாஎனநின்றது. மாந்தர் நித்திய பதவசனம். வல் - விரைவுக் குறிப்புணர்த்தும் உரிச்சொல்;

இது வல்லே என ஏகாரச்சாரியையும், வல்லை என ஐகாரச்சாரியையும் பெற்றுவருவதே அன்றி வல் எனத் தனித்துஞ் சிறுபான்மை வரும். அருக்கும்-பிறவினைப்பெயரெச்சம்; பகுதி-அருக்கு; தன்வினைப் பகுதி அருகு. கோள் - வலி; தங்களியக்கத்தால் ஒருவனுக்கு நன்மையையே னும், தீமையையேனும் உறுவிக்கும் கிரகங்களுக்காதலால் பண்பாகு பெயர். (ருo)

51. தூர்ந்தொழுகிக் கண்ணுந் துணைக டுணைகளே
சார்ந்தொழுகிக் கண்ணுஞ் சலவர் சலவரே
ஈர்ந்தகல் லின்னாக் கயவ ரிவர்மூவர்
தேர்ந்தக்காற் றோன்றும் பொருள்.

(இ - ள்.) தூர்ந்து - (பொருள் வருவாய்) அடைபட்டு (இல்லாமல்), ஒழுகிக்கண்ணும் - வாழுமிடத்தும், துணைகள் - உறவாவோர், துணைகளே - உறவினரோயாவர்; சார்ந்து - (கருத்துக்கு) இணங்கி, ஒழுகிக்கண்ணும் - நடந்தவிடத்தும், சலவர் - பகைவர், சலவரே - பகைவரேயாவர்; ஈர்ந்த - பிளக்கப்பட்ட, கல் - கல்லை ஒப்பவர், இன்னா துன்பந்தருங் குணமுள்ள, கயவர் - கீழ்மக்களேயாவர்; இவர்மூவர் - இவர்மூவரும், தேர்ந்தக்கால் - (அறிவுடையோர்) ஆராயுமிடத்து, தோன்றும் பொருள் - (தம் இயற்கை) வெளிப்படும் பொருள்களாவர், எ-று.

(வி - ரை.) உம்மை யிரண்டும் இறந்ததுதழீஇயதனோடு உயர்வு சிறப்பில் வந்தன. ஏ இரண்டும் தேற்றம். துணை-பண்பாகுபெயர், அது கள் என்னும் பன்மைவிகுதிபெற்றது. ஒழுகியக்கண் - எதிர்காலவினையெச்சம்; ஒழுகு-பகுதி, இன்-சாரியை, ஈற்றுனகரக்கேடுகடைக்குறை, அகரம் சாரியை, உகரக்கேடும் யகரத்தோற்றமுஞ் சந்தி, கண் - எதிர்காலவினையெச்சப்பொருள்விகுதி. இது சாரியை முதலியன தொகுத்தலாய் நின்றது. கயவர் வழக்கு. இது தொல்காப்பியம்; மங்கலவழக்

னென்பது நன்னூல்; கய-பகுதி, (உரிச்சொல் பெருமை) வ்-சந்தி, அர்-பல்லோர்படர்க்கை விகுதி. தேர்ந்தக்காற் றேன்றும் பொருளெனவே தேராவிடத்து இத்தன்மையரெனத் தோன்றாப் பொருளாவர் என்பது குறிப்பெச்சம். (ருக)

52. கண்ணுக் கணிகலங் கண்ணோட்டங் காமுற்ற
பெண்ணுக் கணிகல நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலங் கல்வியிம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள.

(இ - ள்.) கண்ணுக்கு - கண்களுக்கு, அணி கலம் - அணிதற்குரிய அணியாவது, கண்ணோட்டம் - தாட்சிணியம்; காமுற்ற - (கணவனால்) விரும்பப்பட்ட, பெண்ணுக்கு - குலமகளுக்கு, அணிகலம் - அணிதற்குரிய அணியாவது, நாண் உடைமை - நாணம் உடையளாயிருத்தல்; நண்ணும் - இனிவரும், மறுமைக்கு - மறுபிறப்பிற்கு, அணி கலம் - அணிதற்குரிய அணியாவது, கல்வி - கல்வியறிவாம்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், குறி உடையார்கண்ணே - ஆராயும் இயல்புடையாரிடத்தே, உள - உண்டு, எ-று.

(வி - ரை.) ஒருவன் இம்மையில் கற்ற கல்வி அவனை நல்வழிப் படுத்தி மறுமையிலும் இன்பந்தருதலால் 'மறுமைக்கணிகலம்' என்றார். தாட்சிணிய மென்பது தன்னொடு பழகினவர் சொன்னவை மறுக்க மாட்டாமை. அது அவர்மேல் கண்சென்றபின் உண்டாவதாதலால் கண்ணோட்டமென்றது காரணவாகுபெயர். கண்சென்றபின் உண்டாவதைப்பற்றித் தாட்சிணியம் அக்கண்ணுக் கணிகலமென்றது. கண்ணோட்டம் - தொழிற்பண்புத்தற்கிழமைப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். இது ஒரு சொல்லின் தன்மைப் பட்டு நின்றது. ஏ-தேற்றம். (ருஉ)

53. குருடன் மனையா ளழகு மிருடீரக்
கற்றறி வில்லான் கதழ்ந்துரையும்—பற்றிய

பண்ணிற் றெரியாதான் யாழ்கேட்பு மிம்மூன்றும்
எண்ணிற் றெரியாப் பொருள்.

(இ-ள்.) குருடன்-குருடனுடைய, மனையாள் அழகும் - மனைவியினது அழகும்; இருள் தீர - பேதைமை நீங்கும்படி, கற்று - நூல்களைக்) கற்று, அறிவு - (அவற்றின் பொருளை உள்ளபடி) அறிதல், இல்லான் - இல்லாதவன், கதழ்ந்து உரையும் - விரைந்து சொல்லுஞ் சொல்லும்; பற்றிய - (பாடற்றொழிலோடு) பொருந்திய, பண்ணின் - பண்களை, தெரியாதான் - அறியாதவன், யாழ் கேட்பும் - யாழினிசையைக் கேட்டலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், எண்ணின் - ஆராயின், தெரியாப் பொருள் - (அம்மூவருக்கும் முறையே) தெரியாத பொருள்களாம், எ-று.

(வி-ரை.) பேதை நன்மை தீமை பகுத்துணர மாட்டாமையால் அப்பேதைக்குணத்தை உவமையாகுபெயரால் 'இருள்' என்றார். கதழ்ந்து - உரிச்சொலடியாகப்பிறந்த இறந்தகாலவினையெச்சம்; இது உரை என்னும் தொழிலடியாகப் பிறந்தபெயர்கொண்டது. உரை - பகுதி, செயப்படுபொருண்மை யுணர்த்தும் ஐ விகுதி புணர்ந்துகெட்டு உரையெனநின்றது. பண்ணின் என்னுஞ் சொல்லினீற்று இன்சாரியையின் னகரம் றகரமானது வலித்தல் விகாரம். யாழ்-கருவியாகுபெயர். (ரு௩)

54. தன்பயந் தூக்காரைச் சார்தலுந் தாம்பயவா
நன்பயங் காய்வின்கட் கூறலும்—பின்பயவாக்
குற்றம் பிறர்மே லுரைத்தலு மிம்மூன்றும்
தெற்றென வில்லார் தொழில்.

(இ-ள்.) தன் பயம்-(தமக்குவரும் பயனையே அன்றித்) தனக்கு வரும் பயனை, தூக்காரை - ஆராயாதவரை, சார்தலும்-(ஒருவன்) சேர்ந்திருத்தலும், தாம் பயவா-தாம் பயன்படாதனவாகிய, நல் பயம்-நன்மையாகிய பயனைத்தருமொழிகளை, காய்வின்கண் - (ஒருவன்) கோபித்து

மிடத்து, கூறலும் - சொல்லுதலும்; பின் பயவா - பின்னே துன்பத்தைத்தரும், குற்றம் - குற்றத்தை, பிறர்மேல்-மற்றவர்மேல், உரைத்தலும்-சொல்லுதலும், இம்மூன்றும்-ஆகிய இம்மூன்றும், தெற்றெனவு-(இன்னது இன்னபயனைத் தருமென்பதைத்) தேறுதல், இல்லார் தொழில் - இல்லாதவருடைய செய்கையாம், எ - று.

(வி-ரை.) பயம்-இருகுறிலையடுத்த மகரவீற்றுச் சொல்லாதலால் மகரத்துக்கு னகரம்போலியாய்வந்தது. இச்சொல் பயனென வழங்கலே பெரும்பான்மையது. இப்பெயர்ச்சொலடியாகப் பய, பயத்தல், பயந்தது, பயந்த, பயந்து என வினைவிகற்பங்கள் பிறக்கும். காய்வு-தொழிற்பெயர். தெற்றெனவு இடைச்சொல்லடியாகப்பிறந்த தொழிற்பெயர்; தெற்றென்-பகுதி, அ-சாரியை, வு-புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி. எனவு என்னுந்தொழிற்பெயர் ஒருமொழியைச் சார்ந்தே வருவதன்றித் தனித்து வழங்காது. தல் விகுதிபெற்றுத் தண்ணென்றல், வெச்சென்றல் என வருதலுங் காண்க. (ருச)

55. அருமறை காவாத நட்டும் பெருமையை
வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும்-யாண்டானுஞ்
செற்றங்கொண் டாடுஞ் சிறுதொழும்பு மிம்மூவர்
ஒற்ரு ளெனப்படு வார்.

(இ-ள்.) அருமறை - (பிறர்க்கு) வெளிப்படுத்தல் கூடாத இரகசியத்தை, காவாத - காக்காத, நட்டும்-நட்பாளனும்; பெருமையை-(தான் நாயகனென்னும் இருவருடைய) பெருமையை, வேண்டாது - விரும்பிக்காவாமல், விட்டு - (அவனது குறைகளை) வெளிப்படுத்தி, ஒழிந்த - (அறத்தினின்றும்) நீங்கிய, பெண்பாலும் - பெண்பாலைச்சார்ந்தவளும், யாண்டானும் - எங்காயினும், செற்றம் கொண்டு - (தன் தலைவன்மேல்) வைரங்கொண்டு, ஆடும் - (அவன்மேல்) குற்றங் கூறுகின்ற, சிறுதொழும்பும் - குற்றேவலாளனும், இம்மூவர் - ஆகிய இம்மூவரும்,

ஒற்றாள் எனப்படுவார் - ஒற்றர்களை ஒப்பரென்று சொல்லப்படுவார், எ - று

(வி-ரை.) மறைவெளிப்பட்டால் குற்றம் விளையுமென்று கருதிப் பிறரை மறைத்துச் சொல்லிய சொல் ஆதலால் மறு - பகுதி, ஐ - செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. நட்புத் தொழிலாகு பெயர். தன்பெருமை கற்பால் உண்டாகும் பெருமை. நாயகன் பெருமை தன்னை உடைமையால் உண்டாகும் பெருமை. விடுதல்-வெளியே செல்ல விடுதல். பெருமையை வேண்டி விடாது அறத்தில் நிற்பவளே பெண் எனப்படுவாளாதலால் இவள் பெண் அல்லள் பிறப்பாற் பெண்ணுவாளென்பார் 'பெண்பால்' என்றும், அடுத்தவருடைய குற்றங்களை வெளிப்படுத்தலால் அவர்களை 'ஒற்றாள்'என்றுங் கூறினர். பெண்பால்-பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகைப்பெயர். யாண்டு என்பது தன் தலைவனுக்குப் பகைவர், அயலவர், நட்பினராகிய இடம். ஆன் - ஆயினென்பதன்மரூஉ. எனிலென்பது எலெனவும், எனினென்பது எனெனவும் மரீஇ வழங்கும். உம்மை முற்றும்மை. இம்மூவரென்பதனீற்றில் முற்றும்மை விகாரத்தால்தொக்கது. தொழும்பு - பண்பாகுபெயர். ஆடுதல் - பேசுதல். ஒற்றாள்-இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். ஒற்று துறந்தார் தீர்த்தயாத்திரை முதலிய ஒழுக்கத்தார் உருவங்கொண்டு பகைவரிடஞ் சென்று ஒன்றுபட்டு அங்கு நடப்பனவற்றை அறிந்துவந்து உரைப்பார். ஒற்று - முதனிலைத் தொழிலாகுபெயர். (௫௫)

56. முந்தை யெழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
தந்தையுந் தாயும் வழிபட்டு—வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்தலிம் மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு.

(இ-ள்) முந்தை - இளமையில், எழுத்தின் வரவு - கல்வியறிவினது வரவும்; உணர்ந்து - கல்வியறிவையடைந்து, பிற்பாடு - பின்பு,

தந்தையும் தாயும் - தந்தையையும் தாயையும், வழிபட்டு வந்த - பூசித்து வந்த, ஒழுக்கம் - ஒழுக்கமும்; பெருநெறி சேர்தல் - பெரியோரது வழியைச் சேர்தலும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், விழுப்பநெறி - உயர்வாகிய முத்திவழியை, தூரா ஆறு - தூர்க்காதவிதமாம், எ-று.

(வி-ரை.) முந்தை-பண்புப்பெயர்; அது இளமையின்மேல்நின்றது. முந்து-பகுதி, ஐ-பகுதிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி. எழுத்து-எழுதப்படுவதென்னும் பொருளில் எழுது - பகுதி, ஐ-செயப்படுபொருண்மை விகுதி புணர்ந்து கெட்டமாத்திரத்தில் பகுதி ஒற்று இரட்டி நின்றது; முதனிலை திரிந்த தொழிலாகுபெயருமாம். இவ்வாறு நின்ற இப்பெயர் கருவியாகுபெயராய்க் கல்வியை யுணர்த்தியது. எழுத்தின் வரவு தொழிற் பண்புத் தற்கிழமைப் பொருட்டாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். எழுத்தினது வரவென்பது ஆறுவது வினைமுதற் பொருண்மையில் வந்த காரகம். தந்தை - முறைப்பெயர்; தாம்-பகுதி, த்-எழுத்துப்பேறு, ஐ - முறைப்பொருள் விகுதி, பகுதி ஆ அவ்வானது குறுக்கல்விகாரம், மகரம் நகரமானது சந்தி, பகுதி ஒருமையில் பன்மை வந்த வழுவமைதி. வழிபட்டுவந்த - இறந்தகாலப்பெயரெச்சம்; வழிபடு - பகுதி, வா - தொழிலிடையறுமைப்பொருண்மை விகுதி, பகுதி ஒற்று இரட்டியது விரித்தல் விகாரம், அனைத்துமொரு பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அ-பெயரெச்ச விகுதி, பகுதி ஆ அவ்வானதும், சந்தித்தகரம் நகரமானதும் விகாரம். தூரா என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச வினை தன்வினைக்கும் பிறவினைக்கும் பொது. (ருசு)

57. கொட்டி யளந்தமையாப் பாடலுந் தட்டித்துப்
பிச்சையுக் குண்பான் பிளிற்றலும்—துச்சிருந்தான்
ஆளுங் கலங்கா முறுதலு மிம்மூன்றும்
கேள்வியு ளின்னா தன.

(இ-ள்.) கொட்டி - தாளவோசையால், அளந்து - அளக்கப்பட்டு, அமையா - (அதனோடு) பொருந்தாமல், பாடலும் - பாடுதலும்; தட்டி - கைகொட்டி, துப்பிச்சை - சோற்றுப்பிச்சைக்கு, புக்கு - புகுந்து, உண்பான் - (வாங்கி) உண்ணும் வாழ்க்கையுடையவன், பிளிற்றலும் - (தான் சென்ற வீட்டில்) இரைதலும்; துச்சு இருந்தான் - ஒதுக்குக்குடியிருந்தவன், ஆளும் - (அவ்வில்லத்தானால்) ஆளப்படும், கலம் - பாத்திரங்களை, காமுறுதலும் - (கண்டு) இச்சித்தலும், இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், கேள்வியுள் - கேட்கப்படுபவைகளுள், இன்னாதன - இனிமையாகாதவைகளாம், எ - று.

(வி-ரை.) கொட்டி - தொழிலடியாகப் பிறந்தபெயர்; கொட்டு - பகுதி, இ-செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. இச்சொல் கருவியாகுபெயராய் ஓசையை உணர்த்தியது. து-முதனிலைத் தொழிலாகுபெயராய் உணவை யுணர்த்தியது. துச்சு - முதனிலைத்திரிந்த தொழிலாகுபெயராய்ச் சிறிதுபொழுது தங்குமிடத்துக் காயிற்று. பிளிற்றல் பிளிறலெனவும் வரும். (௫எ)

58. பழமையை நோக்கி யளித்தல் கிழமையால்
கேளி ருவப்பத் தழுவுதல்—கேளிராய்த்
துன்னிய சொல்லா லினந்திரட்ட லிம்மூன்றும்
மன்னற் கிளையான் தொழில்.

(இ-ள்.) பழமையை நோக்கி - (நட்பாளரது) பழையராகுந்தன்மையைப்பாராட்டி, அளித்தல் - (அவர்க்குவேண்டுவனவற்றைக்) கொடுத்தலும்; கேளிர் - சுற்றத்தாரை, உவப்ப - மகிழும்படி, கிழமையால் - உரிமையினால், தழுவுதல் - அணைத்தலும்; கேளிர் ஆய் - உறவினராய், துன்னிய - சூழும்படி, சொல்லால் - இன்சொற்களால், இனம் திரட்டல் - நல்லினத்தைக் கூட்டுதலும், இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், மன்னற்கு இளையான் தொழில் - அமைச்சனுடைய தொழில்களாம், எ - று.

(வி-ரை.) அளித்தல்-கருணையை யுணர்த்தும் பண்பாகிய அளியென்னும் பெயரடியாகப் பிறந்த தொழிற்பெயர். துன்னிய-செய்யிய என்னும் வாய்பாட் டெதிர்காலவினையெச்சம்; அது திரட்டலென்னுந் தொழிற்பெயர் கொண்டது. அமைச்சன் அரசனுக்கு இணையாயிருத்தல்பற்றி அவனை 'மன்னற்கிளையான்' என்றார். மன்னன்-இடைச்சொலடியாகப் பிறந்தபெயர்; மன் (மிகுதி இடைச்சொல்)-பகுதி, ன்-சந்தி, அன்-ஆண்பாற்படர்க்கை விகுதி. (ருஅ)

59\. கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்.

(இ-ள்.) கிளைஞர்க்கு - உறவினர்க்கு, உதவாதான்-உபகரியாதவனுடைய, செல்வமும் - செல்வமும்; பைங்கூழ்-பயிர், விளைவின்கண் - விளைவுதருங்காலத்தில்,போற்றான்-(அதனைக்)காக்கும் இயல்பில்லாதவனுடைய, உழவும் - உழவுத்தொழிலும்; இளையன் ஆய் - அறிவில்லானாகி, கள் உண்டு வாழ்வான் - மதுவையுண்டு வாழ்வானுடைய, குடிமையும் - குடிப்பிறப்பும்; இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், உள்ளன போல - உள்ளனபோலக் காணப்பட்டு, கெடும் - அழியும், எ-று.

(வி-ரை.) கிளைஞர்-தொழிலடியாகப் பிறந்தபெயர்; கிளை-பகுதி, ஞ்-பெயரிடைநிலை, அர்-பல்லோர்படர்க்கைவிகுதி இப்பகுதி உவமையாகுபெயராய்ச் சுற்றத்தாரை யுணர்த்தலுமுண்டு. இளையனென்பதில் இளமை அறிவின்மேல் நின்றது. இளமை - பகுதி, அன் - ஆண்பாற்படர்க்கைவிகுதி, "ஈறுபோதல்" என்பதனால் மை கெட்டு, "இனைய வும்" என்பதனால் பகுதி அகரம் இளை என ஐகாரமாகி, ய் - சந்தி பெற்று முடிந்தது. காணப்பட்டு என்பது அவாய்நிலையால் வந்தது. ()

60\. பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும் பாஅய்
விலங்கின் பிறப்பின் வெருவும்—புலந்தெரியா

மக்கட் பிறப்பி னிரப்பிடும்பை இம்மூன்றுந்
துக்கப் பிறப்பாய் விடும்.

(இ-ள்.) பேய்ப்பிறப்பின்-பேயினது பிறப்படைந்த உயிர்களில், பெரு பசியும்-மிக்கபசியும்; பாய் - பாயுமியல்புடைய, விலங்கின் பிறப்பின் - மிருகப்பிறப்படைந்த உயிர்களில், வெருவும் - அச்சமும்; புலம் தெரியா - அறிவாகிய பொருளை உணராத, மக்கள் பிறப்பின் - மனிதப்பிறப்படைந்த உயிர்களில், நிரப்பு - வறுமையும், இடும்பை - துன்பந்தருவனவாம்; இம்மூன்றும் - ஆதலால் இம்மூன்று பிறப்புயிர்களும், துக்கப்பிறப்பு ஆய்விடும் - துன்பமாகிய பிறப்புள்ள உயிர்களாய் முடியும், எ - று.

(வி-ரை.) அளபெடைக ளிரண்டும் செய்யுளிசை நிறைக்கவந்தன. பேய் விலங்கு என்பன சாதியொருமைகள். மக்கள் சாதிப்பன்மை. பிறப்பென்பன நான்கும் தொழிலாகுபெயர்கள். வெருவு-தொழிற்பெயர்; வெரு-முதனிலை, உ-சாரியை, வ்-சந்தி. முதனிலை மாத்திரையாய் வரின் வெரு என வரும். இது புடைபெயருங்கால் வெருவுகின்றான், வெருவுகின்ற என உகரச்சாரியை பெறும். இவ்வாறே மரு, உத என்னும் பகுதிகளும் வரும். ஒருவன் செல்வமடைதற்குக் காரணம் அவன் செய்த நல்வினை என உணரமாட்டாத மக்கட்பிறப்பென்பார் 'புலந்தெரியா மக்கட்பிறப்பு' என்றார். நிரப்பு-மங்கலவழக்கு. ஆய்விடும்-செய்யுமென்முற்று; ஆ-பகுதி, ய்-விரித்தல் விகாரம், விடு-துணிவுப்பொருண்மை விகுதி, அனைத்துமொரு பகுதி, உம் விகுதி, உகரக்கேடு சந்தி. இது பெயரெச்சமே வினைமுற்றானது. (௬0)

61. ஐயறிவுந் தம்மை யடைய வொழுகுதல்
எய்துவ தெய்தாமை முற்காத்தல்—வைகலும்
மாறேற்கு மன்னர் நிலையறித லிம்மூன்றும்
சீரேற்ற பேரமைச்சர் கோள்.

(இ - ள்.) ஐ அறிவும் - ஐம்பொறிகளின் அறிவுகளும், தம்மை அடைய - (தீயநெறியில் செல்லாமல்) தம்மிடத்து அடங்கிநிற்கும் படி, ஒழுகுதல் - (நல்வழியில்) நடக்குதலும், எய்துவது - (அரசனை) அடைவதாகிய துன்பத்தை, எய்தாமை - அடையாதபடி, முன் காத்தல்- முன் அறிந்து தடுத்தலும், வைகலும் - தினமும், மாறு - (தம்முடைய) பகைமையை, ஏற்கும் - ஏற்றுக்கொள்ளுதற்குரிய, மன்னர் நிலை-அரச ருடைய இருப்பை, அறிதல் - (ஒற்றர்களால்) அறிந்து அதற்குத் தக்க படி) செய்தலும், இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், சீர் எற்ற-சீர்த் தியை மேற்கொண்ட, பேர் அமைச்சர் கோள் - பெருமையாகிய மந் திரிகளது துணிவுகளாம், எ-று.

(வி-ரை.) ஐம்பொறிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி. எய்து வது - எதிர்காலவினையாலணையும்பெயர்; இது எய்தாமை முற்காத்த லென்பதனுல் துன்பத்தின் மேலதாயிற்று. எய்தாமை - எதிர்மறை வினையெச்சம்; எய்து-பகுதி, ஆ-எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொருபகுதி, மை-எதிர்மறை வினையெச்ச விகுதி. காத்தல்- தடுத்தல். "குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன்" என்னும் பெரி யோர் செய்யுளிலும், "அறிவற்றங் காக்குங்கருவி"என்னுங் குறளிலும் அச்சொல் அவ்வாறு பொருள்படுதல் காண்க. உம்மைகள் மூன்றும் முற்றும்மைகள். மாறு - முதனிலைத் தொழிற்பெயர். நிலை - தொழிற் பெயர்; நில்-பகுதி, ஐ-புடைபெயர்ச்சிப் பொருள் விகுதி. (சுக)

62. நன்றிப் பயன்றூக்கா நாணிலியுஞ் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த வடைக்கலங் கொள்வானு மிம்மூவர்
எச்ச மிழந்துவாழ் வார்.

(இ - ள்.) நன்றிப் பயன் - (தனக்கு ஒருவன் செய்த) உபகாரத் தினது பயனை, தூக்கா - அளந்தறியாத, நாண் இலியும் - நாணமில்லா

தவனும்; மன்றில் - நியாயத்தலத்தில், சான்ருேர் முன் - (கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்தவர் முன்னே, கொடும் பாடு-பொய்ச்சொல்லை, உரைப்பானும் - சொல்லுமியல்புடையானும்; நன்று - நன்கு காக்குமிடம், இன்றி - இல்லாதவனுய், வைத்த - (ஒருவன் தேடி) வைத்த, அடைக்கலம் - அடைக்கலப்பொருளை, கொள்வானும் - (தனக்கு) உரியதாக்கிக் கொள்பவனும்; இம்மூவர் - ஆகிய இம்மூவரும், எச்சம் இழந்து - (தம்முடைய) மக்களை இழந்து, வாழ்வார் - வருந்தி உயிர்வாழ்பவர், எ-று.

(வி-ரை.) நாணிலி இதில் விகுதி இகரம் ஆண்பாலையுணர்த்தியது. இவ்விகுதி கருந்தழலி எனப் பெண்பாலிலும், பாசி என ஒன்றன்பாலிலும் வரும் கொடும்பாடு என்பதில் கொடுமை வளைவு; அது செம்மைக்கு மாருயிருத்தல். கொடும்புறம், கொடுவரி என்பவற்றிலுங் காண்க. வாய்பாடு என்பது குறைந்துபாடென நின்றது; பொருள்-சொல். கொடும்பாடு-பொய்ச்சொல். நன்று-பண்படியாகப் பிறந்தபெயர்; நல்-பகுதி, து-ஒன்றன்படர்க்கைப்பெயர் விகுதி, லகரமும் தகரமும் றகரமானது சந்தி, பகுதி யீற்று றகரம் னகரமானது மெலித்தல்; அச்சொல் இடத்தின்மேல் நின்றது. அடைக்கலம்-பண்பாகுபெயர். எச்சம்-தொழிலடியாகப் பிறந்தபெயர்; எஞ்சு - பகுதி, அம் - வினைமுதற்பொருண்மை விகுதி, ஞகரம் சகரமானது வலித்தல், உகரக்கேடு சந்தி. அம் - விகுதிப் புணர்ச்சியில் உயிர்த்தொடர், நெடிற்ருெடர், மென்ருெடர்க் குற்றியலுகரப் பகுதி விகாரப்படல் இயற்கையாதலால் இதனை அவ்வாறு முடிந்த தொழிற்பெயரெனக்கொண்டு தொழிலாகுபெய ரென்னலுமாம். எச்சம் எஞ்சிநிற்பதென்னும் பொருளதாதலால் ஒருவன் இறப்பினும் எஞ்சிநிற்கும் கீர்த்திக்குமாம். வாழ்தல் இங்கு உயிர்வாழ்தல். ()

63. நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்—சீர்பயவாத்
தன்மையி லாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த வில.